SWATHANTRA SANGU Regd. No. M. 2611

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

போஜனத்துக்கு முன் சண்டை
—படம்

காட்டு ராஜா முஸோலினி
—படம்

60 பவுனுக்கு ஒரு பாடம்

'குடும்ப சுகம்!'
—சிறு கதை

ராஜாத்தியின் கடிதம்

சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை
—ஈ. கிருஷ்ணய்யர்

விவசாயிகளின் கடன்
—ஸ்ரீ பொன்னைய நாடார், M.A.

ஒரு கலெக்டரும் காந்தியும்

கையெழுத்து ஜோஸ்யம்
—தமாஷ் கதை

புத்தகம் 4. பங்குனி மீ 10௳ (23-3-34) வெள்ளி இதழ் 17.

நீளம் எவ்வளவு?

பத்திரிகாசிரியர்களின் பரிதாப நிலைமையைப்பற்றி ஒரு பத்திரிகாசிரியர் வேடிக்கையாகப் பேசுவார். அதில் ஒரு விஷயம் கட்டுரைகளின் நீளத்தைப்பற்றியதாகும். "ஜாதியடி அளவுகோலை வைத்து இலக்கியத்தை அளக்கலாமா? இந்த அருமையான வேலையைச் செய்பவன் பத்திரிகாசிரியன் தான்" என்பதே அந்த விஷயம்.

இலக்கியத்தை அளவுகோல் வைத்து அளக்கலாமா, கூடாதா என்பது வேறு விஷயம். பத்திரிகாசிரியர்கள் இந்த வேலையைச் செய்தே தீரவேண்டியதா யிருக்கிறது. இது அவர்களுடைய துர்ப்பாக்கியம்தான். வியாசக்காரர் அழகாக, நன்றாக, சிரமப்பட்டுத்தான் கட்டுரையை எழுதி யிருக்கிறார். என்றாலும் என்ன செய்கிறது? 9-அங்குல நீளமுள்ள 'காலம்' 12 அங்குலம் சங்கப் பலகை மாதிரி நீளுகிறதோ, மாட்டேனென்கிறதே.

ஒரு கட்டுரையோ கதையோ வந்தவுடன், பத்திரிகாசிரியர்கள் முதன் முதல் செய்யும் காரியம் "எத்தனை பக்கம் எழுதியிருக்கிறார்? எவ்வளவு நீளம் வரும்?" என்ற விஷயத்தைத்தான் பார்க்கிறார்கள்; பார்க்கவேண்டி யிருக்கிறது. சில பேருடைய வியாசமோ கதையோ, அதைப் போட்டே ஒரு பத்திரிகை முழுவதையும் தயார் செய்து விடலாம்போல் அவ்வளவு நீளமாயிருக்கிறது. எவ்வளவுதான் நல்ல விஷயமா யிருந்தாலும், ஒரே ஒரு வியாசத்தைப் போட்டுப் பத்திரிகை நடத்த முடியுமா? அதற்குப் புஸ்தகம்தான் போட வேண்டும்.

பத்திரிகைகளில் பல அங்கங்கள் வேண்டி யிருக்கிறது. ஒரு பத்திரிகை பல ருசிகளைப் பூர்த்தி செய்ய வேண்டி யிருக்கிறது. ஆகையால், அத்தனை அங்கங்களுக்கும் கொஞ்சம் கொஞ்சம் இடம் தந்தாக வேண்டி யிருக்கிறது. இந்தச் சங்கதியை விஷயதானம் செய்யும் நண்பர்கள் மனதில் வைப்பது அவசியமாகும்.

"ஏன்? நீண்டதா யிருந்தால் என்ன? தொடரும், தொடரும் என்று கொஞ்சங்கொஞ்சமாய்ப் போடலாகாதோ?" என்று சிலர் கேட்கக்கூடும். தொடருவதற்கென்றே எல்லாரும் எழுதிக் கொண்டிருந்தால், வாசகர் நம்மைத் தொடரத் தயாராயிருக்கிறார்களா என்பதைப் பார்க்கவேண்டாமா? அநேக வாசகர் இந்த வாரத்திலிருந்து அடுத்த வாரத்துக்குத் தொடரக்கூடத் தயாரா யிருப்பதாகத் தெரிய வில்லை. தொடரும் வாசகர் வேண்டுமென்றால் ஸி. ஐ. டி. உத்யோகஸ்தர்களைத் தான் பிடிக்கவேண்டும். அப்படிப் பத்திரிகை வாசித்துத் தேச கைங்கரியம் செய்ய வேண்டுமென்ற அக்கரை ஸி.ஐ.டி. உத்யோகஸ்தர்களுக்கு இருப்பதாய்த் தோன்றவில்லை.

எழுதும் அம்சத்தையும் எழுதும் பத்திரிகையையும் உத்தேசித்து, பொருத்தமான நீளத்தைக் கூடியவரையில் முதலிலேயே எல்லை கட்டிக் கொள்ளுவதே நல்லது. பெரிய தேசோத்தாரணப் பொருளாதாரத் திட்டங்களைக்கூட, கணக்குப்போட்டு நடத்தி விடுகிறார்கள் இந்தக் காலத்தில். குறிப்பிட்ட விஷயங்களின் குறிப்பிட்ட சில அம்சங்களைச் சுருக்கமாகவோ, விரிவாகவோ வேண்டிய அளவுக்குள் எழுதி முடிப்பது அசாத்தியமா, என்ன?

உத்தேச அளவுக்குமேல் ஒரு வியாசமோ கதையோ, ரொம்ப நீளமாகவோ அல்லது குட்டையாகவோ போவதற்குச் சில காரணங்கள் உண்டு. சரக்கு இல்லாமல் வியாபாரம் செய்வதைப் போல, எழுதப்புகும் விஷயத்தைப் பற்றிய தகவல் அதிகம் தெரியாமலே ஒன்றை எழுதத் துவங்கினால், முதல் தாளிலேயே பேனா நின்று விடுகிறது. இது அதிசயமல்ல. துரோபதை துகில் மாதிரி நீளுவதற்குக் காரணமோ வேறே. எடுத்துக்கொண்ட விஷயத்துக்கும் அளவுக்கும் பொருத்தமான அம்சங்களை மாத்திரம் சொல்ல ஒரு எச்சரிக்கை வேண்டும். அப்படி யில்லாமல், எழுதும் சமயத்தில் தோன்றும் 'அபூர்வ விஷயங்கள்' அத்தனையையும் திணித்துவிட வேண்டுமென்று சிலருக்கு ஆசை விழுந்து விடுகிறது. "இச்சமயம் தப்பினால் மறுசமயம் வாய்ப்ப தரிது" என்ற கொள்கையை அனுசரிப்பது கட்டுரைகள் விஷயத்தில் சரிப்பட்டு வராது.

வால்டேர் என்ற பிரஞ்சுக்காரர், பிரஞ்சுக் குடியரசுக்கு அஸ்திவாரம் போட்ட பெரியார்களுள் ஒருவர்; பிரமாதமான ஆசிரியர். இவர் ஒரே ஒரு விஷயத்தைச் சிறு கதையாக எழுதினாராம். பிறகு அதையே நீண்டதோர் நாவலாக எழுதினாராம். மறுபடியும் அதையே நாடக மேடையில் நடிக்கக் கூடிய ஒரு நாடகமாகவும் எழுதி விட்டாராம். இந்த மாதிரி பழக்கத்தை எழுத்தாளரெல்லாம் பழகிக்கொள்ள வேண்டும்; முக்கியமாக, பத்திரிகைகளுக்கு எழுதுவோர் பழகிக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

—தி. ஜ. ர.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே"

போன் நெ. 8088 | ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] பங்குனிமீ 10உ வெள்ளிக்கிழமை (23—3—1934) [No. 17

ஜெயில் 'மரியாதை'!

அரசாங்கங்களெல்லாம் வர வர மிருக சுபாவத்துக்கே மரியாதை காட்டத் தொடங்கி யிருக்கின்றன. உலகம் முற்றிலும் இன்றைக்கு அந்த நிலைதான். இந்தியாவிலுள்ள ஜெயில் அதிகாரிகள் சேர்ந்த மகாநாடொன்று அலகாபாத்தில் நடைபெற்றது. ஜெயில் நிர்வாகத்தைக் கெடுபிடியாக நடத்துவதற்கான ஆலோசனைகள் சொல்லப்பட்டன. 'ஏ' வகுப்பு 'பி' வகுப்புக் கைதிகளை வேணுமானால் தண்டிப்பதற்கு ஜெயில் சூப்ரண்டுகளுக்கு அதிகார மிருக்க வேண்டுமென்றும் 'சி' வகுப்பில் அவர்களைத் தள்ள உரிமை வேண்டுமென்றும் ஒருவர் சொன்னாராம். எல்லா ஆலோசனைகளையும் விட மிருக நாற்றம் நிறைந்த ஆலோசனை ஒன்று குறிப்பிடத்தக்கது.

சிறையில் யாராவது பட்டினி கிடந்தால், (1) அந்தக் கைதியைத் தனியாகப் பிரித்து வைப்பதற்கும், (2) கைதியே வேண்டுமென்று கேட்டாலொழியச் சோறு கொடுக்காம லிருப்பதற்கும் (3) பட்டினி கிடப்பவனுக்குச் சவுக்கடி கொடுத்து அவனைச் சோறு தின்னும்படி செய்வதற்கும் அதிகாரங்கள் வேண்டுமென்று மகாநாட்டில் யோசனைகள் சொல்லப்பட்டன. பட்டினி கிடப்ப வரைச் சவுக்காலடிப்பதாம்! நாகரிக ஷம்யா நாகரிகம்! முன்னே மகாத்மாஜி உண்ணாவிரத மிருந்தபோது வடக்கே ஒரு ஆங்கிலோ இந்தியப் பத்திரிகை "சவுக்கடி தந்து காந்திக்குச் சோறூட்ட வேண்டும்" என்று எழுதிற்று. ஆனால் காந்திஜி விஷயத்தில் அத்தகைய அமுலினைச் சர்க்கார் ஏதும் நடத்தவில்லை யென்பது ஒருபுற மிருக்கட்டும்; அந்த ஆங்கிலோ இந்திய ஆசிரியனின் மூளையை இரவல் வாங்கிக் கொண்டு இந்த மகாநாட்டில் யாரோ ஒரு சகுனி இந்தச் சவுக்கடி ஆலோசனையைச் சொல்லி யிருக்கிறான். 'கைதியின் சதையைத் தண்டித்து அவனது ஆத்மாவைக் கலக்கவேண்டும்' என்பதுதானே இந்த ஆலோசனைக்கு அர்த்தம். இத்தகைய ஆலோசனைகள்தான் நாகரிக நிர்வாக முறையானால், அத்தகைய நாகரிகத்தினின்று உலகத்தைப் பகவான்தான் காக்கவேண்டும்.

போஜனத்துக்கு முன் சண்டை

ஆசியாவின் பல நாடுகளிலும், ஆப்பிரிக்காவின் பல இடங்களிலும் தங்கள் வர்த்தகத்தைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென இங்கிலாந்தும் ஆசைப்படுகிறது; ஜப்பானும் ஆசைப்படுகிறது. வீணைப் போட்டி போடாமல் ஏதாவது ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளலா மென்று நினைத்து இரண்டு நாட்டுப் பிரதிகளும் உட்கார்ந்து ஆலோசித்தனர். பேச்சு முறிந்துபோய் விட்டதாகச் செய்தி.

இது நல்ல வேடிக்கை தானே! வழியேயுள்ள ஒரு வீட்டில் புகுந்து சாப்பிடுவதில் யார் யார் எவ்வளவு சாப்பிடுவது என்று இரண்டு பேர் முதலிலேயே சண்டை போட்டுக்கொண்டால் அது எவ்வளவு நாகரிகமா யிருக்குமோ அவ்வளவு நாகரிகமா யிருக்கிறது இவர்கள் பேச்சும்!

காந்தியைச் சந்திக்கப் பயமா?

சீமையிலிருந்து ஒரு புதிய கோஷ்டி இந்தியாவுக்கு வந்திருக்கிறது. அது அங்குமிங்கும் அலைந்து ஒரு காரியம் செய்யப் போகிறதாம். இந்தியாவுக்குப் புதிய அரசியல் திட்டம் வகுப்பதை ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்கள் எதிர்க்க வேண்டுமென இரகஸ்யப் பிரசாரம் செய்யப் போகிறதாம். அந்தக் கோஷ்டியில் ஒருவரான மேஜர் கோர்ட்டால்ட் என்பவர், "நாங்கள் அநேக பெரியார்களை இந்தியாவில் சந்தித்துப் பேசப்போகிறோம். ஆனால் நான் மகாத்மா காந்தி என்றவரை மட்டும் சந்திக்கப் போவதில்லை" என்று கூறினாராம். சீமையிலேயே அவருக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து அனுப்பி யிருக்கிறார்கள் போலிருக்கிறது. ஒரு லார்ட் இர்வின் மகாத்மா காந்தியை நேருக்கு நேர் சந்தித்ததன் பயனாக காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்ட தல்லவா? ஆகவே காந்திஜியைச் சந்தித்துப் பேசுவதில் எவ்வளவு பயம் ஆங்கிலேயர்களுக்கு இருக்கிறதென்பது இதனின்று தெரிகிறது.

ஒரு கலெக்டரும் காந்திஜியும்

வடக்கே தார்வார் என்ற இடத்தில் அவ்வூர்க் கலெக்டர் தமது பராக்கிரமத்தைக் காட்ட ஒரு சிறிய காரியம் செய்ததாகக் கேள்வி. மகாத்மா காந்தி அவ்வூருக்குச் சென்றிருந்தபோது அவர் ஆரோகணித்துச் சென்ற மோட்டார் வண்டியில் ஒரு சிறிய தேசியக் கொடியை வரவேற்புச் சபையார் பொருத்தி யிருந்தார்களாம். இதைப் பிரமாதமாக எண்ணிவிட்டார் அந்தக் கலெக்டர். உடனே அந்தக் கலெக்டர் மகாத்மாவுக்கு ஒரு கடிதம் விடுத்தாராம். "ராஜீயக் காரியங்களில் ஒரு வருஷத்துக்கு நுழைவதில்லையெனத் தாங்கள் சொல்லியிருக்க இந்த மாதிரி ஒரு தேசியக் கொடியைப் பறக்க விடுவதற்கு அநுமதிக்கலாமா?" என்று கேட்டிருந்தாராம். அதற்கு மகாத்மா முதல்தரமான பதிலளித்ததாகத் தெரிகிறது. "தேசியக் கொடி பறப்பது ராஜீயப் பிரசார மாகாது. தேசியக் கொடியைச் சட்ட விரோதமெனச் சர்க்கார் சொல்லவில்லை என்பதை நினைப்பூட்டுகிறேன். தென்னாட்டில் பல இடங்களில் எனது பிரயாணத்தின்போது தேசியக் கொடிகள் பறந்ததுண்டு. எந்த அதிகாரியும் அங்கு குற்றம் கண்டுபிடிக்கவில்லை".

இந்தக் கலெக்டர் 1930-ம் வருஷத்தில் இன்னமும் வசிக்கின்றார் போலிருக்கிறது.

மோர் வீரருக்குப் பின்னால்

சென்னைச் சட்டசபையில் மோர் வீரர் என்று பெயர் வாங்கிய மிஸ்டர் கிருஷ்ணன் நாயருக்குச் சட்ட மந்திரி உத்தியோகம் கிடைப்பதற்கு முன் மிஸ்டர் நாயர் என்னென்னவோ வாய்ச் சவடால்களெல்லாம் அடித்துக் கொண்டிருந்தார். உதாரணமாக எம்.பி. நாராயண மேனனை விடுதலை செய்ய வேண்டுமென்று ஆதிகாலத்தில் அவர் பண்ணிக் கொண்டிருந்த பிரசாரம் வியக்கத்தக்கதா யிருந்தது. உத்யோகம் வந்ததோ இல்லையோ, "காங்கிரஸ் கைதிகளுக்கு மோரில்லை, மோர் தர மாட்டோம், மோர் குடிப்பது தேச வழக்கமில்லை" என்று ஏதேதோ மோர்ப் பதில்களையே சொல்லித் தமது உத்தியோக காலத்தைக் கழித்துவிட்டார்.

இவருக்குப் பின்னால் ஸர் குருமா வெங்கடரெட்டி இந்த உத்தியோகத்துக்கு வரப்போகிறாராம். இவரை நமக்குத் தெரியாதா? ஒரு காலத்தில் மூன்று மந்திரிகளில் ஒருவராயிருந்து இந்த மாகாணத்தை அவர் ஆண்ட கதை தெரியாதா? தென்னாப்பிரிக்காவுக்குத் தூதராகப் போன அந்தச் சாமர்த்தியம்தான் தெரியாதா? ஆனால் இந்தச் சர்க்கார் உத்தியோகம் என்ற சாமான் இருக்கின்றதே, அது ஒரேஒரு கூட்டத்தில்தான் பரிமாறக் கூடிய வஸ்து என்பது இதனின்று நன்றாய் விளங்குகிறது. நாயரைப் போலவே ரெட்டியாரும் "மோர் லேது!" என்று பல்லவி பாடப் போகிறாரா என்பதையும் பார்ப்போம்.

பந்தயக் குதிரைக்கு வரி

பம்பாய்க் கார்ப்பொரேஷன் தனது வருமானத்தை விருத்தி செய்து கொள்வதற்காகச் சில ஆலோசனைகளைச் சர்க்காரிடம் சமர்ப்பித்திருக்கிறது. அவைகளில் பந்தயத்தி லோடும் குதிரை யொன்றுக்கு நூறு ரூபா வீதம் வரி வசூலிக்க அதிகாரம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதைப் பற்றி ஷை சபையில் பேச்சு வந்தபோது "எஜமான் பணத்தைத் திருடி, குதிரைப் பந்தயத்தில் தோற்று, அநேகர் தற்கொலை செய்துகொள்கின்றனர். அநேக குடும்பங்கள் குதிரைப் பந்தயத்தில் பிரதிதினமும் அழிகின்றன. ஆகவே இத்தனை நாசத்துக்கும் காரணமான பந்தயக் குதிரைகள்மீது வரி போடுவது சரியானதுதான்" என்று ஒருவர் பேசினார். சபை ஆமோதித்தது.

'வோட்டர்' வேஷம்!

எலெக்ஷன்களில் ஆள் மாறாட்டமாக வோட்டுப் போட்டுவிட்டுத் திருட்டுத்தனங்கள் செய்வது அநேக இடங்களில் நடக்கின்ற விஷயம். அத்தகைய வேஷதாரிகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு ஒருவிதத் தண்டனை தருவதற்கு டெல்லியில் ஒரு ஏற்பாடு நடந்தது. 'ஸர் அப்துல் ரகிமான்' என்று பெயர் சொல்லிக் கொண்டு யாரோ ஒரு பேர்வழி வோட்டுப் போட வந்தான். கண்டுபிடிக்கப்பட்டான். அருகே சாலையிலிருந்த ஒரு சிலையைச் சுற்றிச் சுற்றி அவன் மூன்று தரம் வர வேண்டுமெனச் சொன்னார்களாம். அந்தப் போலிப் பேர்வழி அந்தச் சிலையைச் சுற்றிச் சுற்றி வரும்போது அங்கிருந்த கூட்டம் அனுபவித்த தமாஷைச் சொல்லி முடியாது. இந்த மாதிரி தண்டனையைத் தென்னாட்டு முனிசிபல் எலெக்ஷன்களிலும் வைத்தால் தமாஷா யிருக்குமென்று தோன்றுகிறது. அபேக்ஷகர்களையே நிற்க வைத்துச் சுற்றிச் சுற்றிப் பிரதட்சிணம் வருமாறு செய்தால் இன்னும் வேடிக்கையா யிருக்கு மல்லவா?

‘குயவன் கடையில் மாடு’

டெல்லிச் சட்ட சபையில் திரு. ராம சுவாமி முதலியார் வெகு காரமாக ஒரு பேச்சுப் பேசினர். ஜனங்களின் தலைவர்களென்று சொல்பவர்களில் சிலர் வெளியே யிருந்துகொண்டு கலாட்டாச் செய்கிறார்களே யன்றிச் சட்டசபைக்கு வராது காலங்கழிக்கிறார்களென்று கூறினார். வர்த்தகச் சங்கங்களில் தலைவர்களா யிருப்பவர்களைத் தாக்கியபோது “பருந்துகள் ஆண்ட இடத்தில் கழுகுகள் வந்து குடியிருக்கின்றன” என்று கூறினர். ஆனல் அதே சட்ட சபையில் ஒரு காலத்தில் மோதிலால், மாளவியா, லஜபதிராய் முதலிய சிங்கங்கள் கர்ஜித்த துண்டு. அந்தச் சட்ட சபையில் இன்றைக்கு எலிகள் கிண்ணாரம் போடுகின்றனவே, அதை ராம சுவாமி முதலியார் மறந்து விட்டார் போலும். முதலியாரின் பேச்சைப் பற்றிக் குறிப்பிட்டபோது கயாப்பிரசாத் சிங், “குயவன் கடையில் வெறி பிடித்த காளை புகுந்ததுபோல இன்றைக்கு முதலியார் கத்தினர்” என்று கூறினர். குப்பை போடுவானேன், பிறகு வாரிச் சுமப்பானேன் என்று முதலியாரைக் கேட்கின்றோம்.

மாப்பிள்ளையைவிட மணப்பெண் வயததிகமானல்

இது மிக்க ருசிகரமான கதை. நப்போலியன் ஜோஸபைன் என்ற பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளத் தீர்மானித்திருந்தான். ஆனல் கலியாணப் பெண்ணோ நப்போலியனைவிடப் பல வயது மூத்தவளா யிருந்தாள். ஆகவே ஓர் சூழ்ச்சி செய்யப்பட்டதாம். நப்போலியன் தன் வயதோடு ஒரு வருஷம் அதிகமாகச் சொன்னனம். ஜோஸபைன் தன் வயதில் ஒரு வருஷம் குறைத்துச் சொன்னளாம். இருவருக்கு மிருந்த வயது வித்தியாசம் மிகவும் குறைவாக இருப்பதாகக் காட்டுவதற்கு இத்தகைய சூழ்ச்சி செய்தார்களாம். இந்தக் கதையை உதாரணமாக்கி இந்திய இராணுவ நிர்வாகச் செலவைப்பற்றி லீடர்ப் பத்திரிகை ஒரு குறிப்பும் எழுதியிருக்கிறது.

இந்திய இராணுவ சம்பந்தமாக ஏற்படும் செலவுகளோ அபாரமாயிருக்கின்றன. அதை 46 கோடிக்கு அதிகமாகக் காட்டுவதற்குச் சர்க்கார் வெட்கப்படுகிறது. ஆகவே ஒரு சூழ்ச்சி செய்யப்பட்டது. இராணுவத்தில் வேலை பார்க்கும் பாதிரிமார்களின் சம்பளங்கள் இராணுவ நிர்வாகத்தில் கணக்கிடப் படுவதில்லை. அந்தச் செலவை ‘எக்லிஸியாஸ்டிகல்’ இலாகாச் செலவு என்று கணக்குக் காட்டுகின்றார்கள். வடமேற்கு எல்லைப் புறத்திலுள்ள ரயில்வேக்கள் இராணுவ உபயோகத்துக்காகவே பெரும்பாலும் உளது. ஆனல் அந்த ரயில்வேயினுல் ஏற்படும் நஷ்டத்தை ரயில் நிர்வாகத்தின் தலையில் போடுகிறார்கள். எல்லாம் எதற்காக? இராணுவச் செலவு மிக்க குறைவாக இருப்பதாகக் காட்டுவதற்காகவே. ஆனல் வேறு இலாக்காக்களின் செலவைத் தூக்கலாகக் காட்டுகிறார்கள். ஜோஸபைன்-நப்போலியன் கல்யாணத்தில் செய்த சூழ்ச்சிபோல—

“பாலைக் குடியுங்கள் !”

அப்பாடா! கண்டுபிடித்து விட்டார்கள். இந்தியாவில் ‘வெண்ணை’ உற்பத்தி விருத்தியாகா திருப்பதற்குக் காரணம் அந்நிய நாட்டினின்று தகரம் தகரமாக இறங்கிக்கொண் டிருப்பது தான் என்று கண்டுபிடித்து விட்டார்கள். ‘விவசாய ஆராய்ச்சி—இம்பீரியல் கவுன்ஸில்’ (Imperial Council of Agricultural research) என்ற மகா நிபுணர் சபை இந்த உண்மையைக் கண்டு பிடித்துவிட்டது. இதோடு இன்னொரு உபதேசத்தையும் மேற்படி சபை செய்திருக்கிறது. “நிறையப் பாலைக் குடியுங்கள்” என்று இந்திய மகாஜனங்களிடை பிரசாரம் செய்ய வேண்டுமாம். அந்தப் பிரசாரத்திற்குச் செலவு தொகை 5,000 ரூபா வேண்டுமென்றும் மேற்படி சபை சொல்லுகிறது. பிரசாரம் இல்லாத காரணத்தினுலா இந்தியர் பால் குடிக்காதிருக்கின்றார்கள்? பால் குடித்தால் நல்லது என்று ஒவ்வொரு இந்தியனுக்கும் தெரியும். ஆனல் பால் வாங்குவதற்கு அவனிடம் பணமில்லை. தேசத்தின் வறுமைதான் இதற்குக் காரணம். ஆகவே அந்தச் சபையினர் செலவழிக்க விருக்கும் 5,000 ரூபாயைக் கொண்டு எங்கேயாவது ஒரு பசு மடம் வைத்தால் நல்லது என்றே தோன்றுகிறது.

“ஆபத்தான மனிதன்”

“மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் என்பவர் உலகுக்கு ஆபத்து விளைவிக்கும் மனிதனுக இருப்பதால் அவருக்கு ஒரு லார்ட் பட்டமாவது கொடுத்து இப்போதுள்ள ஆபத்தான நிலைமையைக் கடத்தவேண்டும்” என்று ஆக்ஸ்போர்டு மாணவர் சங்கத்தில் ஓர் தீர்மானம் நிறைவேறி யிருக்கிறது. ஷை மாணவர் சங்கத்தினர் சென்ற வருடம் மிஸ்டர் காரகா என்ற ஒரு இந்தியரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. உலகத்தில் யுத்தமே கூடாதென்று இன்னொரு தீர்மானமும் மேற்படி சங்கத்தில் நிறைவேறியதுண்டு. அப்பேர்ப்பட்ட சங்கம் வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு லார்ட் பட்டம் கிடைக்க வேண்டுமெனச் சிபார்சு செய்வானேனென்று கேட்கலாம்.

இங்கிலாந்தில் பரம்பரையாக லார்ட் பட்டம் பெற்றவர்களுக்கு லார்டு சபையில் இடமேயன்றி அவர்களுக்குக் காமன்ஸ் சபையில் இடம் கிடையவே கிடையாது. காமன்ஸ் சபைதான் ஏகாதிபத்திய அரசியலை நடத்திக் கொண்டிருப்பது. முத்தண்ணு சபையாகிய லார்டு சபையோ ‘நாம்கே வாஸ்தே’ சபை ; தூக்கத்தில் போட்டி போடுபவர்களுக்கான சபை. வின்ஸ்டன் சர்ச்சிலின் கொட்டத்தையடக்கிப் பல்லைப் பிடுங்கின பாம்புபோல ஆக்க வேண்டு மென்பதற்காகவே இந்த யோசனை.

கையெழுத்து ஜோஸ்யம்

(ஸி. என். ஜீ. சர்மா)

ஓர் நாள் காலை நான் தபாற் கடிதங்களை யெல்லாம் பிரித்துப் படித்துக் கொண்டிருந்தேன். அவைகளுள் என் மருமானொருவனுக்கும் ஒரு 'கவர்' வந்திருந்தது. சிறு பையன்களுக்கு, இத்தனை சுதந்திரமா என்று என்னுடம்பில் சற்று உஷ்ணம் பிறந்தது. என் நண்பர் அருணாசலம் என்முன் நாற்காலியில் வீற்றிருந்தார். அவரை ஒரு பார்வை பார்த்து என் கோபத்தை வெளியிடுபவனாய், "என்ன சார். அதிகப் பிரசங்கித்தனத்தைப் பார்த்தீர்களா? இந்தச் சின்னப் பயலுக்கு, 'கரெஸ்பாண்டென்ஸ்' வெகு அமுலாயிருக்கிறது. உம்....காலம்...." என்றேன். அவர், "பிரித்துப் பாருங்களேன்! சிறு பையன்களுக்கு என்னென்ன கடிதம் வருகிறதென்று பார்த்தால்தானே அவர்களது மனப்போக்குத் தெரியும்" என்றார்.

எனக்கும் அவர் சொல்வதில் ஊக்கந்தான். எவ்விதமாயாவது 'கவரை'த் திறந்து பார்த்துவிட்டால் போதுமென்பதுதான் என் எண்ணம். இருந்தாலும் மற்றொருவர் முன்னிலையில் பிறர் கடிதத்தைப் பிரிக்கக் கூச்சம்.

அருணாசலம் தலை மறையும் வரையில் காத்திருந்தேன். மறைந்ததோ இல்லையோ, சுற்று முற்றும் பார்த்தேன். உடம்பு வியர்த்தது. கைகள் நடுங்கின. மெதுவாகக் கதவுகளை யடைத்தேன். தண்ணீரில் ஊற வைத்துக் 'கவரின்' பின்புறத்தைத் திறந்து கடிதத்தை எடுத்தேன். அதில் "டைப்" செய்யப்பட்டுக் கீழ்க்கண்ட வரிகள் காணப்பட்டன :—

"ஐயா, நீங்கள் அனுப்பிய கடிதத்தில் உங்களெழுத்துக்கள் நிமிர்ந்தும் தீர்க்கமாயு மிருப்பதால், சத்தியத்தில் பிரிய முள்ளவராயும், கபடற்றவராயு மிருப்பீர்கள். எக்காரியத்தையுந் துணிந்து செய்ய வல்லவரா யிருப்பீர். ஆனால் சீராக, அமையப் பெறாது அக்ஷரங்கள் ஒடுங்கி யிருப்பதால் பிறரிடம் மிகவும் பயந்தவராயும், உலக அவதூறுக்கு நடுங்குபவராயு மிருக்கலாம். அவ்வித மனப்பான்மை யிருப்பதனால், நீங்கள் சீக்கிரம் முன்னேற்ற மடையாம லிருக்கிறீர்கள். உங்களிடத்தில் ஆத்ம நம்பிக்கையை விருத்தி செய்துகொண்டாலொழிய முன்வர இயலாது. உயர் குணம், வைராக்கியம் இவை நிரம்பப் பெற்றவரா யிருப்பீர். ரூபாய் ஐந்து அனுப்பினால் இதர வாழ்நாள் சம்பவங்கள் விவரமாகத் தெரிவிக்கப்படும்.

உண்மையுள்ள,

——ஜோதிஷர்"

பார்த்தேன். ஓகோ! ஏற்கனவே இப்பையனுக்குத் தன்மதிப்பு மிகுதியாக உண்டு. இந்தன்மதிப்பையும் அவன் கண்டால் பித்தந் தலைக்கேறிவிடும். இதற்கொரு சூழ்ச்சி செய்ய வேண்டுமென்று யோசித்தேன். என் மூளைக் கெட்டாதது என்ன இருக்கிறது? (மூளையை மியூஸியத்திற்குக் கேட்டிருக்கிறார்கள்! அவ்விஷயம் பின்.) எனது "டைப் ரைட்டர்" அருகில் சென்று வேறு கடுதாசி யெடுத்துக் கீழ்க்கண்டபடி "டைப்" செய்தேன்:—

"ஐயா, நீ முரட்டு சுபாவமுள்ளவன். கர்விஷ்டன். மனம்போன போக்கிற் செல்கிறாய். உனது தாய் வழியில் நெருங்கிய பந்துவின் சொல்லைத் தெய்வ வாக்காகக் கருதி நடந்தாலன்றி க்ஷேமம் விளையாது. இருந்தாலும் நற்காலம் சமீபித்துவிட்டது. ரூ. 5 அனுப்பிவைத்தால் விவரமான பதில் வரும்.

தங்கள் உண்மையுள்ள

—— ஜோதிஷர்"

கவரில் போட்டு ஒட்டினேன். கொஞ்சமும் வித்தியாசம் காணோம். என் வல்லமையைக் கண்டு வியந்து, அதற்கேற்ப உலகம் என்னைச் சன்மானிக்கவில்லையே யென்று விழிக்கனவு காணுங்கால் "மாமா!" என்ற சப்தம் என் செவியில் நுழைந்தது. திடுக்கிட் டெழுந்தேன். என் மருமகன் சங்கரன் வணக்கமாய் முன்னின்றான். "எனக்குக் கடிதமுண்டா?" என வினவினான். என் கௌரவத்தை யெல்லாம் மூட்டை கட்டி முகத்தில் வைத்துப் பிரகாசிக்கச் செய்தேன். குரலிலும் மாறுதல் செய்துகொண்டு, "இதோ வந்திருக்கு. கவர்லே கடிதம் வர ஆரம்பமாய் விட்டது, உனக்கு" என்றேன்.

கடிதத்தைக் கையி லெடுத்தான். வேகமாகக் கூடத்திற்குச் சென்றான். 'மாமி' 'மாமி' என்று ஓலமிட்டான். என் மனைவி கையிற் கரண்டியுடன் ஓடோடி வந்தாள். எனது மாமனாரும் எழுந்துவந்து நின்றார். மூக்குக் கண்ணாடியை நெற்றிக் கண்ணாடியாக்கிக்கொண்டு, "என்னடா சங்கரா! என்ன விசேஷம்" என்றார். இந்த 'மீட்டிங்கை'க் கண்டதும் நானும் அவர்களருகே வந்து நின்றேன். அதே சமயத்தில் என் நண்பர் அருணாசலமும் திரும்பி வந்து சேர்ந்தார். மருமகன் கடிதத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு, வாசித்து வாசித்து மகிழ்ந்தான். எனது மாமனாருக்குப் பொறுக்க முடியவில்லை, "அது! ஜோஸியர் கடிதமா?" என்று கேட்டுக்கொண்டே, கடிதத்தைப் பிடுங்கி வாசித்தார். 'நிரபராதி'யாகிய நான் வேள்விக்குப் போகும் ஆடுபோல், 'பேந்தப் பேந்த' விழித்துக்கொண்டிருந்தேன். என் மனைவி, "என்—! சங்கரா! உனக்கேன் ஜோஸியமும் கீசியமும்" என்றாள். ஆரம்பித்தான் சங்கரன். "இல்லை! மாமி! மாமாவிற்காகன்னா ஜோஸியம் பார்த்து வந்திருக்கு. உங்க அப்பா (அங்கு நின்றிருந்த என் மாமனாரைச் சுட்டிக் காட்டி) மாமா கையெழுத்தை ஜோஸியருக்கு அனுப்பச் சொன்னார். ஜோஸியன் அதிலே யிருந்து ஏதேதோ கண்டுபிடித்து எழுதி யிருக்கான்" என்று சொல்லிச் சிரித்தான். அருணாசலமய்யர் குறும்புப் பேர்வழி! அக்கடிதத்தை வாசித்து நன்றாக விளங்கும்படி தமிழில் 'தர்ஜமா' செய்தார். என் மனைவி என்னைப் பார்த்து நெறு நெறு வென்று பல்லைக் கடித்தாள். என் முகம் வெளுத்தது. நான் எப்படி, செய்ததை யெல்லாம் அவர்களிடம் விவரிப்பது?

"இந்த ஜோஸியப் பயல்தான் கண்டானுக்கும் எல்லாம் பொய்" என்று சொல்லிவிட்டுச் சட்டை யணிந்துகொண்டு வீட்டை விட்டு நழுவி விட்டேன். உண்மையாகவே சமையலறைக்குப் போய், எனது மனைவியைத் தனியே சந்திக்கப் பயம். நான் செய்த குற்றத்திற்கு அன்று உண்ணா விரதம் இருந்தேன். என் வினை யென்ன செய்தது பார்த்தீர்களா?

கவிதை

(ஸ்ரீயுத வ. வே. சு. அய்யர் எழுதியது)

[ஸ்ரீயுத ஐயரால் 1918-ம் வருஷத்தில் எழுதப்பட்ட இந்த வியாசத்தின் ஒரு பகுதி சென்ற வாரம் வெளியாயிற்று. ஜனங்கள் கவிதைக்கு எவ்வளவு பறந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அதில் விளக்கினார். சில கவிகளை உதாரணமாக எடுத்துத் தந்தார். அவற்றைப்பற்றிய சில அபிப்பிராயங்களைச் சொல்லிவிட்டு, கவிதைக்கு வேண்டிய ஒரு முக்கிய லட்சணத்தை இந்தப் பாகத்தில் விளக்குகிறார்.]

முதற்கண் இந்தக் கவிகளின் நடையும் நாதமும் மிக அழகாக இருக்கின்றன. வார்த்தைகளில் தெளிவும் நயமும் வாக்கியங்களில் தேக் கெறிதலில்லாத நல்ல சுதியும் ஒட்டமும் இருககின்றன. நல்லிலக்கியம் எதற்கும் இந்த ஒட்டம் அவசியமே. ஆனால் நல்ல கவிக்கு இது இன்றியமையாதது. சிலாக்கியமான பாவங்கள் கவியின் சித்தத்தில் எழுந்தால் அவை நல்ல நடையில்தான் அமையும். ஆனாலும் கவியானவன் உழைத்து உழைத்துத் தன்னுடைய வாக்கில் நல்ல சொல் நயத்தைத் தேடிக் கொள்வது அத்தியாவசியம்.

ஆனால் இந்தக் கவிகளில் நடையின் அழகு மாத்திரமில்லை. அவைகளினுள்ளே பொருள் நிறைவு இன்னும் மிகுதியாக இருக்கின்றது. இந்தப் பொருள் நிறைவானது சத்தியத்தை நாடுவதினின்றும் உன்னதமான நோக்கத்தினின்றும்தான் வரும். பிரகிருதியின் தோற்றங்களையும் மனித இருதயத்தில் எழும் அன்பு, வெகுளி, வீரம் முதலிய பாவங்களையும் பக்தி விசுவாசத்தோடு கண்டறிந்து, பேசப்புகும் பொருளோடு மனதை லயப்படுத்தி, மனிதர் இருதயத்தை ஆகருஷிக்கும் பல துறைகளில் ஒரு துறையை அடுத்துப் பொருள்களை அந்தர் திருஷ்டியால் துளக்கமறக் கண்டு, சகஜ பாவத்தோடு முரணாது எழுதும் கவிஞனுடைய கவியில்தான் பொருள் நிறைவு வரும்.

கவிதையில் சத்தியத்தின் அவசியத்தைப் பற்றி இதற்கு முன்னே பேசி முடித்தோம்.

ஆனால் கவிதை யாவதற்கு ஒரு வர்ணனை சத்தியமாக இருப்பது மாத்திரம் போதாது. அனேக கவிகள் இயற்கைக்குச் சரியான வர்ணனை செய்து விட்டுக் கவி எழுதிவிட்டோம் என்று நினைத்துக் கொள்ளுகிறார்கள். முக்கியமாக வர்ணிக்கும் பொருள்களுக்கோ சம்பவங்களுக்கோ ஏறத்தாழப் பொருத்தமான உவமைகள் அல்லது உருவகங்கள் கற்பித்துவிட்டால், கவியாகி விடுகிறது என்று ஒரு நம்பிக்கை கவிஞர்களுக்குள் நெடுநாளாக இருந்து வருகிறது. ஒரு வித்துவான் ஒரு பெண்ணைப் பார்த்து "பிண்டஸ்தனீ கூர்ச்ச ஸமான வேணீ" என்று வர்ணித்தாராம்.

"மணி நிறத்திணிகல் தொடர்ந்த பாறையில் வேயினம் சொரிகதிர் முத்தம் இடந்தொறும் கிடந்து இமைப்பன, வெக்கிளம் செக்கர் படர்ந்த வானிடைத் தாரகை நிகர்ப்பன பாராய்" அதாவது "மூங்கில்களினின்று சிந்தின முத்துக்கள் சிவப்புக் கற்கள் புதைந்திருக்கும் கறும்பாறைகளில் விழுந்து மின்னிக் கொண்டிருப்பதானது, சாயங்கால வேளையில் செவ்வானம் படர்ந்த ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் மின்னுவது போலிருக்கின்றது" என்று சொல்லும் கம்ப ராமாயணச் செய்யுளில் உவமை என்னவோ சரியாகத்தானிருக்கிறது. ஆனால் அதில் கவிதாலக்ஷணம் மிக மிகக் குறைவே. அது நல்ல கவி ஆகமாட்டாது.

தவிர மேனாட்டு ஆசிரியர்களுக்குள் ரீயாலிஸம் (அதாவது யதார்த்த வர்ணனை) என்ற ஒரு முறை கொஞ்சம் நாளாய் உலாவிக் கொண்டு வருகிறது. உலகத்தில் உள்ள பொருள்கள், சம்பவங்கள், ஒன்று விடாமல் எல்லாம்—அவை எவ்வளவு ஆபாச மானவையாக இருந்தாலும் சரி, எல்லாமே—இலக்கியங்களில் உள்ளது உள்ளபடியே வர்ணிக்கத் தகுந்தவை என்பது அந்த யதார்த்தியர் மதமாகும். பொதுவில் இம்மதத்தினர் இழிப்பு என்னும் சுவையைத்தான் மிகவும் கையாடுகிறார்கள்—அவர்களுடைய இலக்கியங்களில் எங்கு பார்த்தாலும் அவலத்தையும் அருவருப்பையும் தரும் பொருள்களும் சம்பவங்களும்தான் மலிந்து நிற்கும். அப்பேர்ப்பட்ட இலக்கியங்களின் நடை எவ்வளவு அழகாக இருந்தாலும்—அவைகளில் சொல் நயமும் நல்ல ஓசையும் மிகுதியாக இருந்தாலும்—அவை நல்ல கவிதை என்னும் பெயருக்கு அருகமாகா. தமிழிலும் விறலி விடு தூது, கவி குஞ்சரப் பதங்கள், சுப்பராமய்யர் பதங்கள், சமுத்திர விலாசம் முதலிய நூல்கள் இந்த ஆபாச யதார்த்திய முறையைத் தழுவி எழுதப்பட்டவையே.

தவிர, இயற்கைப் பொருள்களில் அருவருப்பைத் தருவனவற்றை விட்டு மற்றவைகளை உள்ளது உள்ளபடியே வர்ணித்தால் அதில் கவிதை இராதோ என வினவினால் நாம் சொல்லுவோம். அதில் கவிதை இருக்கும்தான் : ஆனால் உத்கிருஷ்டமான கவிதைக்கு அது மாத்திரம் போதாது. இன்னும் ஏதோ ஒரு உறுப்பு வேண்டும். சங்கப் பாட்டான மலைபடு கடாத்தையும், ஆங்கிலத்தில் தாம்ஸன் எழுதிய ருது வர்ணனையையும், கோல்டு ஸ்மித் எழுதிய பிரயாணி, பாழாய்விட்ட கிராமம் என்னும் நூல்களையும் இந்த இரண்டாந்தர ஜாதியில்தான் நாம் சேர்க்கிறோம். அவை இயற்கைக் காட்சிகளையும், இயற்கை ஒலிகளையும் உணர்ச்சிகளையும் பெரும்பான்மை உள்ளது உள்ளவாறே வர்ணிக்கும். ஆனால் நாம் இந்தத் தொடர்ச்சியின் முதல் பாகத்தில் காட்டியிருக்கும் உதாரணங்களில் ஏதேனும் ஒன்றோடு இவ்விலக்கியங்களில் சிரேஷ்டமான பாக்களையும் ஒத்திட்டுப் பார்த்தால் இவைகளின் தரம் விண்டு விடும்.

அகன்மலை இறும்பில் துவன்றிய
[யானைப்

பகல் நிலை தளர்க்கும் கவண் உமிழ் [கடுங்கல்
இருவெதிர் ஈர்ங்கழை தந்திக்கல்லெனக்
கருவிரல் ஊகம் பார்ப்போடு இரிய
உயிர் செகு மரபின் கூற்றத் தன்ன
வரும்விசை தவிராது மரம் மறையாக் [கழிமின்

அதாவது "மலைக் காட்டிலுள்ள யானைகள் பகலில் அணுகாதபடி, புனங் காப்போர் வீசும் கவண் கற்கள் பசு மூங்கில் போத்துக்களைத் தாண்டி வருவதைப் பார்த்துக் கருங் குரங்குகள் தங்கள் குட்டிகளைத் தூக்கிக் கொண்டு ஓடும். அக் கற்கள் உயிரைக் கொல்லும் எமன் போலக் குறி பிழையாது வருமாகையால் மரங்களின் மறைவில் ஒதுங்கிக் கொண்டு செல்லுங்கள்" என்ற பொருள் கொண்ட மலைபடு கடாத்தின் செய்யுள்களில் இயற்கைச் சம்பவங்கள் சிலவற்றின் வர்ணனை நன்றாகவே இருக்கிறது. ஆனால் இதன் தொனிக்கும், "அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்ற தம்மா" என்ற அடியின் தொனிக்கும் எவ்வளவு பெரிய பேதம்!

ஆனால், "இயற்கை வர்ணனையில் இவ்வளவுதான் சொல்லமுடியும். இதற்கு மேல் மிகுதியாகச் சொல்ல முடியாது" என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். அவர்களுக்கு ஸேனாங்கூர் என்னும் பிரெஞ்சு ஆசிரியன் எழுதிய ஓபெர்மான் உரை நடையிலிருந்து சில வாக்கியங்களை இங்கே மொழி பெயர்த்துக் காட்டுவோம். அவை பின்வருமாறு :—

"ஏரியின் கரைமீது ஏறி நின்றேன். ஏரி நீரின் சிற்றலைகள் கரையில் மோதி மோதி மடிந்த வண்ணமாக இருந்தன. காற்று அசைவற்றிருந்தது. ஒரு பொருளேனும் சலிக்கவில்லை. ஜாமத்தோடு ஜாமம் நான் அங்கேயே நின்றுவிட்டேன். வைகறையாகையால் சந்திரன் தரையின்மீதும் நீரின் மீதும் தன் கடைசிக் கிரணங்களை வீசி மனத்தில் சொல்லொணாத ஒரு சோகத்தை உண்டாக்கி விட்டான். மலைவாயிலில் விழுந்து கொண்டிருக்கிற சந்திரனுடைய நிலவில் மூழ்கியிருக்கும் இரவின் நிச்சப்தத்துக்கிடையில் கரையில் தனியாக நின்றுகொண்டு சிற்றலைகளின் மெல்லிய ஓசையைக் கேட்டுக் கொண்டே தியானத்தில் அமிழ்ந்து விடும்போது பிரகிருதியின் தோற்றம் வீறுடைத்தாயிருக்கின்றது.

'நம் வியர்த்தமான வாழ்நாளில் ஒருங்கே ஆநந்தத்தையும் துயரத்தையும் வளர்த்திடும் வாக்கால் சொல்லொணாத சித்தக் கிளர்ச்சி ; எவ்விடத்தும் நம்மினும் பெரிதாயிருக்கிற, எவ்விடத்தும் மனதுக்கு எட்டாததாயிருக்கிற பிரகிருதியின் அகண்ட உணர்ச்சி ; உலகனைத்தினிடத்தும் பெருகும் வேட்கை, பழுத்த ஞானம், களி மயக்கம் தரும் பரவசம்—மொத்தத்தில் மனித இதயமானது ஆசைச் சிதைவாகட்டும், வேணவாவாகட்டும் இவைகளில் எவ்வளவு கொள்ளுமோ அவ்வளவையும் நான் அன்று அனுபவித்தேன்** அந்த ஒரு இரவில் என் வாழ்நாளில் பத்து வருஷ காலம் ஒரே அடியாய்ச் சென்றுவிட்டது. ஆகா ! யாருடைய இதயம் கிழத்தன்மை எய்தாமல் இளையதாகவே இருக்கின்றதோ அவர்கள்தான் பாக்கியசாலிகள் !"

நமது ஆர்ய நாட்டு மகா கவியான ரவீந்திரநாத டாகூர் இயற்கை வர்ணனை எவ்விதம் செய்கிறார் என்பதைக் காட்ட அவருடைய ஓர் செய்யுளை இங்கு மொழி பெயர்த்து வரைவோம்.

"சாளரத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும் மங்கை தன் காதலனுக்குக் கட்டிக்கொண்டிருந்த மாலையையும் மறந்துபோய்விட்டாள். வேனில் தந்த மலரெல்லாம் வாளா கிடக்கின்றன. தன் அங்கையில் தலையைச் சாய்த்துக் கொண்டு அவள் சிந்தாக் கிராந்தையாகி விட்டாள்.

"மந்தமாக வீசும் தென்றலானது சில அந்தரங்கமான மொழிகளை அவள் காதில் பரிவோடு பேசி விட்டுச் செல்லுகின்றது. அதுதான் அவள் தியானபரையாக விளங்குகிறாள்.

"இந்திர நீலம்போல் விளங்கும் வானத்தில் மேகங்கள் மிதந்துகொண்டு செல்கின்றன. மனத்தில் பறவைகள் சிறகுகளை அடித்துக் கொண்டு பறக்கின்றன. மணம் நிறைந்த மகிழ மலர்கள் அப்போதைக் கப்போது மரத்தினின்றும் உதிர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் அவள் நோக்கு அங்கேயெல்லாம் இல்லை.

"அவள் அசைவற்று ஒரே நிலையில் இருந்துகொண்டு துன்பம் நிறைந்த முகத்தோடு முறுவல் பூக்கின்றாள். ஏனெனில் அவள் இதயமாகிய வீணையின் மிருதுவான நரம்புகள் கனவென்னும் மயக்க உலகத்தின் கண்ணே நின்று செவிக்கினிதாய் முரலா நின்றன."

இனிக் கடைசியாக இயற்கையினிடத்தே ஆயுள் முழுவதும் ஈடுபட்டிருந்த ஆங்கிலக் கவி வோர்ட்ஸ்வொர்த்தின் செய்யுள் ஒன்றை இயன்றவரைத் தமிழ்ப் படுத்திக் காட்டுவோம்.

"வானவில் தோன்றும், ஆங்கே மறையும்:
கண்ணினுக் கினிதாய் விளங்கும் ரோஜா மலர் ;
மறுவொழிந் திலங்கும் வானகந் தன்னில்
தண்மதி நின்று களிப்பொடு நோக்கும் ;
இரவின தகத்தே தாரக ஒளிதரக்
கண்கொளாக் காட்சிய தாகும் நீர் நிலையெலாம் ;
எனவும் பேதையேற்கெங்கு சென்றிடினும்
தனியொளி ஒன்று உலகினைத் துறந்து
மீட்சியின் றகன்றது என்னும் துனிசேர்
சிந்தை பெரிதும் துயருறுத் திம்மே."

இந்த மூன்று உதாரணங்களிலும் மலைபடு கடாத்தில் எப்பாகத்திலும் இராத பெருங் கவிதை இருக்கின்றது என்று முதல் நூல்களைப் படிக்காமல் இம்மொழி பெயர்ப்புக்களை மாத்திரம் படிப்பவர்களுக்குக்கூட விளங்கும்.

இதற்குக் காரணம் என்ன என்று பார்ப்போமானால் கவிதையின் இன்னொரு இலக்கணம் புலப்படும். மலைபடு கடாத்தினின்று எடுத்த உதாரணத்தைப் படிக்கும்போது இதயம் அகண்டாகாரத்தை அடையவில்லை என்பது வெளிப்படை. படிப்போர் மனத்தில் அது இயற்கைக் காட்சிகளில் ஒன்றைச் சித்திரித்துக் காட்டுகிறதே ஒழிய, இருதயத்தில் இறங்கி யாதொரு பேருணர்ச்சியையும் கிளப்பவில்லை. மற்ற மூன்று உதாரணங்களும் இதயத்தை விரித்து அதைப் பிரகிருதியின் அகண்டாகாரத்தோடு சையோகிக்கும்படி செய்கின்றன. இவைகளின் ஆசிரியர் மனிதனுடைய பேருணர்ச்சிகளை, அதாவது ஆநந்தம், துக்கம், கவலை மஹத் வஸ்துவோடு இரண்டறக் கலத்தல் முதலிய உணர்ச்சிகளைத் தாங்களும் அநுபவித்து நம்மையும் அநுபவிக்கும்

---

* இந்த மொழி பெயர்ப்பிலுள்ள செய்யுட் குற்றங்களை நான் முற்றிலும் அறிவேன். ஆனால் ஆங்கிலக் கவிஞன் பொருளைக் காட்டுவதுதான் எனது நோக்கமானதால் குற்றங்கள் நிரம்பியிருப்பினும் இந்தப் பாக்களை அப்படியே இங்கே நிறுத்தி வைக்கிறேன். அறிஞர் பொறுத்துக் கொள்ளுவார்களாக.



நாடகம்

("பிக்ஷு"வின் மன நிழல்.)

எனக்கு நாடகம் பார்க்கப் போக வேண்டுமென்ற அவா அதிகமாக உண்டாவதே இல்லை. காரணம் வெறுப்பல்ல, அவசியமின்மைதான். எல்லோரும் அவரவர்கள் கண், காது இவைகளை மாத்திரம் கொஞ்சம் திறந்து வைத்துக்கொண்டால் சுற்றிலும் எப்பொழுதும் நாடகமே தென்படும். தனிப்படச் செலவே செய்யத் தேவையில்லை.

இதோ போகிறான் தெருவில், யாரோ பையன். ஒரு கையில் சருகுதொன்னை. நெய் நிரம்பியது. மற்றொரு கையில் ஒரு காகிதப் பொட்லம். சர்க்கரை போலும்! பையனுக்கு நாக்கில் ஜலம் ஊறுகிறது. வேண்டுமென்றால் சாவகாசமாகத் திண்ணையில் உட்கார்ந்து தின்று விட்டுச் செல்லுகிறதுதானே. ஆனால்—? நாழியானதற்குத் தாயாருக்குச் சமாதானம் என்ன சொல்லுகிறது? பையன் உள்ளத்தில் ஒரு அபாரயுக்தி பிரகாசிக்கிறது. அவ்வளவுதான். தெருவில் போய்க்கொண்டிருக்கும் பொழுதே நாக்கை நெய்யில் தோய்த்துச் சர்க்கரைப் பொட்லத்திலும் தோய்க்கிறான்! ஆஹா! என்ன ஸ்வாரஸ்யம்! நல்ல 'மடி' தான்!........

அது போகட்டும். இதைப் பாருங்கள். மாலைநேரம். கொத்தன்களும், தச்சன்களும், கூலியாட்களும் வீட்டிற்குத் திரும்பிப் போய்க் கொண்டிருக்கின்றனர். சிலருக்குத்தான் ஸ்வயப்பிரஞ்ஞை இருக்கிறது. சிலர் மஹாராஜாக்களைப்போல் நடை போடுகிறார்கள். சிலர் வலது முன் காலை உயரத் தூக்கி நிற்கும் உயர்தரக் குதிரையைப்போல் காற்றில் காலடி வைக்கிறார்கள். ஒரு சிலர் வெகு அடக்க ஒடுக்கத்துடன் தென்படு வோருக்கெல்லாம் கும்பிடு போட்டுக்கொண்டே போகிறார்கள். ஒருவன் தெருப்புறத்துச் சாக்கடையுடன் பலமாகச் சண்டையிட்டு நிற்கிறான். 'வெள்ளைக் குதிரை'யின் வசியம்தான் என்னே!

உலகில் எவ்வளவு மஹாத்மா காந்திகளும், புஸ்ஸி F-உட் ஜான்ஸன்களும் பிரசாரம் செய்த போதிலும் கள், போதை முதலியன சாப்பிடும் வழக்கம் நிற்காது. ஒவ்வொருவனும் தன்னையும், உலகையும், குடும்பத்தையும் சிறிது நேரமாவது மறக்காவிட்டால் உலகமும் வாழ்வும் பெரும் பைத்யக்கார ஆஸ்பத்திரி ஆகிவிடும். இடம், பொருள், ஏவல், காரணம், காரியம் முதலிய விலங்குகளினின்றும் விடுபட்ட சில முக்தர்கள் மட்டும் மதப் பிரசாரத்திலும், வேதாந்தத்திலும், தேச சேவையிலும் அவ் விடுதலையை அடைகிறார்கள். ஆனால் படிப்பற்ற பாமரர்கள் அதே விடுதலையை அல்லது அதற்குச் சமமானதை இப்போதையில் அடைகிறார்கள். அதுபற்றித்தான் உலகு தோன்றிய நாள் முதல் கள்ளுண்டல் கண்டிக்கப் பட்டிருந்தும் அது சாகாமல் ஓங்குகிறது. ஞான போதை ஏற்பட்டா லன்றி இந்தப் போதை விடாது....அடடே! 'வெள்ளைக் குதிரை' யிலிருந்து வேதாந்தத்திற்குப் போய்விட்டேனே!

நான் சொல்ல வந்தது, இவர்களில் பலர் வெகு இனிமையாய்ப் பாடுகின்றனர் என்று. (போதை சாப்பிடும் பாபத்தை அவர்கள் தானே ஏற்கவேண்டும்! போகட்டுமே, நமக்கென்ன?) தேவாரம், திருவாசகம், தாயுமானவர், குதம்பைச் சித்தர், சிவ வாக்கியர், மஸ்தான் முதலியவர்களுடைய பாடல்களை நாம் கேட்போமே. நஷ்டமென்ன? இவர்கள் பாடுவதில் 'நிழல்கள்'கூட உயிர்பெற்று விடுமோ என்று தோன்றுகிறது. அவ்வளவு உருக்கம்! மற்றும் சிலர் நாடகமேடையில் முந்திய இரவில் பாடப்பட்ட புதுப் பாடல்களை அப்படியே பாடித் தீர்த்து விடுகிறார்கள். (எவ்வளவு ஏகஸந்தக் கிராஹிகள்!) பின் நானெதற்குக் காசு கொடுத்து நாடகம் பார்க்கப் போகவேண்டும்?.....

மறுபடி திரை தூக்கி யிருக்கிறேன். இதோ வேறுகாட்சி. கொல்லைக் கட்டில் ஒருவர் குடியிருந்து வருகிறார். பெரிய சம்சாரி. அவருக்கு ஐந்து பெண்களும் ஒரு பிள்ளையும். அரசனை யிருக்கும் பாக்யமில்லாமலே ஆண்டியாகி விட்டார் தகப்பனார். மூன்று பெண்களுக்குக் கல்யாணமாகி விட்டது. இப்பொழுது யோசிக்கிறேன்:—"பகீரதன் கங்கை கொண்டுவந்ததில் என்ன ஆச்சர்யம்?"........நான்காவது பெண்ணை நேற்றுத்தான் ஐம்பத்தி ஐந்து வயதுள்ள மிராசுதாரருக்குக் கொடுத்திருக்கிறார். கைம்பெண் நிலைமை வந்தால் கூட உளுந்து மூட்டைக்குத் தட்டு ஏற்பட நியாயமில்லை என்ற தைரியம்தான் தகப்பனருக்கு. கடைசிப் பெண்ணுக்குத் தகுந்த வரன் தேடிக் கொண் டிருக்கிறார். பையன் நான்காவது F-ஆரமோ என்னமோ படித்துக் கொண்டிருக்கிறான். குபேரனைத் தன்

படி செய்கிறார்கள். சுருங்கச் சொல்லின் இம்மூன்று உதாரணங்களிலும் மனித இருதயத்துக்குப் பிராதான்யம் கொடுக்கப் பட்டிருக்கிறது; மலைபடுகடாத்தின் உதாரணத்திலோ மனித இருதயத்தின் பிரஸ்தாபமே கூடக் கிடையாது.

மனிதனுடைய சரித்திரமும், சுகதுக்கங்களும், உணர்ச்சிகளும் மனப்பாடும்தான் மனிதனுடைய கவிக்கு உரித்தான விஷயம். மற்ற விஷயங்களின் வர்ணனை எல்லாம் இவைகளுக்குச் சார்பாய்த்தான் இருத்தல் வேண்டும். இவைகளோடு சம்பந்தப் படாத வர்ணனைகள் நல்ல சித்திரங்களாக இருக்கலாம். படிப்பதற்கு விநோதமாயும் வேடிக்கையாயும் இருக்கலாம். ஆனால் அவை நல்ல கவிதையாக மாட்டா.

[இதன் தொடர்ச்சியை அடுத்த இதழில் பார்க்கவும்.]

வீட்டுக்கு வரவழைக்கும் வித்தை பையனிடம் இருப்பதாகத் தகப்பனர் நம்புகிறர். ஈசன் செயல் எப்படியோ?

இக்குடும்பத் தலைவருக்கு 25 ரூபாய் பென்ஷன். வேறு வேலை கிடைக்க வில்லை. ஆனல் அவர் மட்டும் வீட்டி லிருப்பதில்லை. பூனை போல் குறுக்கும் நெடுக்குமாக எங்கோ அலைந்து கொண் டிருக்கிறர். அவர் அடிக்கடி கணைப் பதையும், புருவத்தை உயர்த்துவதை யும் கவனித்தால் ஏதோ அபூர்வ ஆராய்ச்சியில் லயித்திருப்பது போல் தோற்றும்.

அவர் வீட்டிலிருக்கும் பொழுது கடன்காரர்கள் வருவது கிடையாது. ஆனல் அவர் வீட்டிலிருந்தால் தானே! பால்காரி, தயிர்க்காரி, பழய வீட்டுச் சொந்தக்காரர், புது வீட்டுக்காரர் இவர் களுக்கெல்லாம் பெண்களும் தாயாரும் பதிலளிக்கும் சாமர்த்யத்தைப் பார்த் தால் ஆகாயப் பந்தல் என்பதற்குப் பொருள் விளங்கும். அதி மதுரமான தேன்மொழி! கடன்காரர்களுக்குக் கூட இவர்களிடம் ஏண்டா பிசாசு போல் பணத்திற்கு அடித்துக் கொள்கி றேம் என்று தோன்றும்!

ஆனல் வீணில் சொல்லக்கூடாது. அவர்கள் மீது என்ன குற்றம்? உள்ள படி இவர்கள் போக்கிரிகள் அல்ல. அக்கிரமக்காரர்கள் அல்ல. ஏழைகள்— பரம ஏழைகள்! அவ்வளவும் வயிற்றுக் கொடுமை. தரித்திர நாராயண னுடைய திருவிளையாடல்!........ஈசா! ஏழைகளுக்குக் கொஞ்சம் இரங்கு. சமாதி பழகாதே. க்ஷீராப்தி சயனம் செய்யாதே. கண்ணைத் திறந்து கஷ் டத்தைப் பார். இல்லாவிட்டால் நாங் கள் சபிப்போம். பலிக்காவிட்டால் பாதகமில்லை........

வீட்டின் முன்கட்டிலிருக்கும் பாட்டி விஷயம் சொல்லவில்லையே? நல்லவள் தான். ஆனல் இரும்புத்தாடை. ஸதா அசைப்போட்டுக் கொண்டே இருக்கி றது. பக்ஷண வகையறு மெல்லப் படாதபோது பேச்சு. அப்பேச்சுக் கெதிரில் ஆகாய கங்கை தோற்றுப் போகும் வேகத்திலும் சப்தத்திலும்: "எங்கள் வீட்டுக் கிட்டு காப்பிக்குச் சர்க் கரை போட்டுக்கொள்வதில்லை. இந்த வருஷம் சீனி வெடிக்கட்டு வாங்கவே இல்லை. அவன் காந்தி கக்ஷி. எனக்கு ராத்ரி பலஹாரத்துக்கு ஒண்ணுமில்லை. அரிசி நனைக்கணும்." இது ஒரு மாதிரி துணுக்கு........

இதெல்லாம் கவனிக்க இஷ்டமில்லை யென்றல், கொல்லைக் கிணற்றங் கரைக் குச் செல்லுங்கள். அதோ தோப்பி னின்று மணிப் புரு கூவுகிறது; காதில் விழுகிறதா? என்ன குளுமை! இனிமை! செந்தேன் தன்மை! என்ன அமைதி! அமிருத குணம்! எப்படி அலை யலை யாய் மோதி அக்குரல் அத் தோப்பி னுள் ஒலித்துப் பரவுகிறது! ஆ ஹா! குக்குக்கூ! கூ! கூ?........

இவ்வளவு இன்ப நாடகம் சூழ்ந்திருக் கும் நமக்கு இராக்கால நாடகம் ஏன்?

ஊன்றி உணர்தற்குரிய உண்மைகள்

(தேசிக விநாயகன் எழுதியது.)

1. நாமே நமக்குத் துணையானல்
நாடும் பொருளும் நற்புகழும்
தாமே நம்மைத் தேடிவரும்
சற்று மிதற்கோரைய முண்டோ?

2. நெஞ்சிற் கருணை நிறைந்தவர்க்கு
நேயம் கொண்ட நெறியோர்க்கு
விஞ்சும் பொறுமை யுடையவர்க்கு
வெல்லும் படைகள் வேறுளவோ?

3. உள்ளந்தேறிச் செய்வினையில்
ஊக்கம் பெருக உழைப்போமேல்
பள்ளம் உயர் மேடாகாதோ?
பாறை பொடியாய்ப் போகாதோ?

4. வாட்டும் உலகில் வழுத்தரிய
வாழ்க்கைத் துணையாம் மங்கையரை
ஆட்டும் பொம்மை அடிமைகளாய்
ஆக்கிவைப்ப தழகாமோ?

5. ஜாதி ஜாதி யென்று நிதம்
சண்டை போட்டு மண்டைகளை
மோதிமோதி யுடைப்பதொரு
மூடச் செயலென் றுணரீரோ?

6. கால நதியின் கதியதனில்
கடவுளாணை காண்பீரேல்
ஞாலமீது சுகமெல்லா
நாளு மடைந்து வாழ்வீரே.

ஸர்வாதிகாரி

(சாணக்கியன் எழுதியது)

காலத்துக்குக் காலம் ராஜீய முறைகள் மாறுகின்றன. 'பலவானே தக்க அரசன்' என்றிருந்த காலமுண்டு. பிறகு முடியரசர் வம்சங்கள், குடியரசுகள், பொது உடைமை அரசியல் முதலிய பலவித அரசு முறைகளை உலகம் பார்த்து விட்டது. சமீபத்தில் தோன்றியிருப்பது 'பாஸிஸ்டு' அரசியல். சோர்ந்து கிடந்திருந்த இத்தாலிய நாட்டைத் தட்டி எழுப்பி, சுதந்திர வாழ்க்கையை உண்டாக்கி, சுற்றிலுமுள்ள நாடுகளுக்கெல்லாம் சிறந்த நாடாக இத்தாலியாவைச் செய்ததற்கு அங்கு தோன்றிய பாஸிஸ்டு இயக்கமே முக்கிய காரணம். அந்தக் கொள்கையை அந்நாட்டு இளைஞரின் உள்ளத்தில் புகுத்தியவன் ஸீனர் முஸோலினி. பரம தேசபக்தன். சாமர்த்தியம் மிகுந்த ராஜதந்திரி. தன் வலியும், மாற்றான் வலியும் உணர்ந்தே வேலை செய்யும் வீரன் முஸோலினி.

சென்ற வாரத்தில் ஐரோப்பாவில் ஒரு முக்கியமான சம்பவம் நடந்தது. ஆதிகாலந் தொட்டு ஒன்றுக்கொன்று விரோத பாவம் காட்டிவந்த இத்தாலி, ஆஸ்திரியா, ஹங்கேரி என்ற மூன்று நாடுகளும் ஒருமித்து ஒரு உடன்படிக்கையில் கையெழுத் திட்டிருக்கின்றன. இந்த உடன்படிக்கைக்கு வருமாறு செய்தவன் இத்தாலிய ஸர்வாதிகாரியாக இன்று வீற்றிருக்கும் முஸோலினிதான்.

ஆஸ்திரியாவில் ஏறக்குறைய ஸர்வாதிகாரி போல ஆட்சிபுரிந்துவரும் டால்பஸ், ஹங்கேரி நாட்டின் தலைவனான கோயெம்போஸ் இவர்கள் முஸோலினியின் திட்டத்தில் கையெழுத் திட்டதற்குக் காரணம் என்ன? முஸோலினி சர்வ சக்திமானாயிருப்பதுதான் காரணம். ஐரோப்பாவின் தலையெழுத்தையே முஸோலினி மாற்றிவிடுவானோ என நினைப்பவர்கள் உலகில் அதிகமாகிக்கொண்டே வருகின்றனர்.

மூன்று நாடுகளும் செய்துகொண்ட அந்த ஒப்பந்தத்தில் 'ஆஸ்திரியா' ஒரு சுதந்திர நாடுதான் என்பது ஒப்புக் கொள்ளப்பட் டிருக்கிறது. இதைக் கேட்டால் ஜர்மனி முதலிய வல்லரசுகளுக்குக் கொஞ்சம் கரகரப்பு ஏற்படக் கூடும். ஏற்பட்டு என்ன செய்வது? இந்த மூன்று நாடுகளின் பரஸ்பர அரசியல் உறவு சம்பந்தமாயும் பரஸ்பர வியாபார சம்பந்தமாயும் கெட்டியான ஏற்பாடுகள் செய்யப்பட் டிருக்கின்றன. (ஐரோப்பாவிலுள்ள இதர வர்த்தக ஜாதிகளுக்கு இந்த ஏற்பாடு அதிசயத்தை விளைவித்திருக்கும் என்பதிலையமில்லை) மத்திய ஐரோப்பாவில் சமாதானத்தை நிலைநாட்டி விடுவதென்பது வெகு காலமாக முஸோலினி ஆசைப் பட்டுக்கொண்டிருந்த மனக்கோட்டை. அந்தக் கோட்டைக்குப் பலமான அஸ்திவாரம் போல இந்த மூவரசு ஒப்பந்தம் இன்று ஏற்பட்டிருக்கிறது. ஜர்மனி, பிரான்ஸ், இதர மத்திய ஐரோப்பியச் சிற்றரசுகள் இத்தகைய ஒப்பந்தத்திற் கிணங்குவதற்குத் தயாராவென ஸீனர் முஸோலினி கேட்கப் போகின்றான். ஒருவர் மீதொருவர் மனக் கசப்புக் கொண்டுள்ள ஜர்மனியும் பிரான்ஸும் தங்கள் மாற்சரியங்களை விட்டு ஒற்றுமைப் படப் போகின்றனவா, அல்லவா வென்பதே இன்றையக் கேள்வி. ஸர்வ தேசச் சங்கம் என்ற ஸ்தாபனத்தால் சாதிக்க முடியாதிருந்த ஓர் மகத்தான காரியத்தைச் சாதிப்பதற்கு முஸோலினி முயன்றிருக்கின்றான். இதை அவன் சாதித்து விட்டால், பாஸிஸ்டுக் கொள்கைக்கே உலகில் வெற்றி யேற்பட்டு விட்டதாகத்தான் அர்த்தம். ஆனால் நடக்குமா?

பாஸிஸ்டுக் கொள்கைகளையும், ஸர்வாதிகாரிகளின் ஆட்சியையும் எதிர்த்துப் பிரசாரம் செய்யும் ராஜ தந்திரிகள் ஐரோப்பாவில் ஏராளமாயிருக்கின்றனர். போன வாரத்தில் இங்கிலாந்தில் கன்ஸெர்வேடிவ் கட்சியினரின் தலைவனான ஸ்டான்ஸே பால்ட்வின் என்ற பழைய புலி ஒரு பிரசங்கம் செய்திருக்கிறது. அந்தப் பிரசங்கத்தில் ஸர்வாதிகார ஆட்சியை வெகு ஏளனமாக பால்டுவின் பேசி யிருக்கிறான். உணர்ச்சி மிகுந்த பிரசங்கம் தான் அது.

'தனிக்காட்டு ராஜா முஸோலினி'

"சுதந்திர மென்பது ஆகாயத்தினின்று அமுதம்போல விழுவதல்ல. ஆங்கிலேயராகிய நாம் அதற்காக ஆதிகாலந்தொட்டுப் போரிட்டு அதைப் பெற்றோம். சுதந்திரத்துக்காக ஏராளமாக இரத்தம் சிந்தினோம். சமய சுதந்திரம், பாரபட்ச மில்லாத நீதி, அபிப்பிராய சுதந்திரம், ராஜீய சுதந்திரம் முதலிய யாவற்றையும் இன்றைக்குப் பெற்றிருக்கின்றோம். நமது சுதந்திரத்தின் கோயிலாக விளங்குவது பார்லிமெண்டு சபை. ஆபத்துக் காலங்களில் நமது தேசத்தைக் காக்கும் சக்தி இந்தச் சபைக்கு உண்டு.

"இத்தத் தேசத்தின் அரசியலை யாரோ ஒரு சர்வாதிகாரியின் கைகளில் கொடுத்து விடுவோமாயின் அது நமது கோழைத்தனத்தையே காட்டும்; நம்மை நாமே ஆண்டு கொள்ளத் திறமையில்லை எனச் சொல்லிக் கொள்வதாகத்தான் பொருள். யாரோ ஒரு ஸர்வாதிகாரி வேலை செய்யட்டுமென்று விட்டு விட்டு நமது தைரியத்தையும் சக்தியையும் நாம் கை விடலாமா?

"சீக்கிரம் பணக்காரர்களாகி விட வேண்டுமென்ற ஆசை ஆங்கிலேயர்களுக் கில்லை. நமது அரசியல் வண்டி கடகடவென்று ஆடிக்கொண்டு போய்க் கொண்டிருந்தால்தா னென்ன? ருஷியாவில் இன்றைக்கு ராஜீய வண்டி ஆடிக்கொண்டு நகரவில்லையா? ஜர்மனி, ஆஸ்திரேலியா, அமெரிக்கா எல்லா விடங்களிலும் உள்ள ராஜீய வாழ்வு கடகடத்துப் போகவில்லை யென்று உறுதி கூற முடியுமா?

"ஒரு சர்வாதிகாரியிடம் ஆட்சி ஒப்படைக்கப்பட்டு விட்டால் அவன் ஆயுள் உள்ளவரையில் திறமையாக ஆண்டாலும் ஆளக்கூடும். ஆனால் அவனுக்குப் பின்பு—? ஸர்வாதிகார ஆட்சி என்பது ஒரு பெரிய கம்பீரமான விருட்சம். ஆனால் அதனுக்கடியில், ஒரு செடிகூட விளையாது. ஆகவே அத்தகைய ஆட்சி நம் நாட்டில் கூடவே கூடாது" என்பது பால்டுவின் செய்த பிரசங்கத்தின் சாராம்சம். பாஸிஸ்டுக் கொள்கை இங்கிலாந்திலும் பரவாது தடுப்பதற்கே இந்தப் பிரசங்கங்கள் நடக்கின்றன.

ஐரோப்பாவில் போன வாரத்தில் ஏற்பட்ட மூவரசு ஒப்பந்த விஷயத்தில் இங்கிலாந்து எத்தகைய அபிப்பிராயம் கொள்ளப்போகிறது என்பதைப் பொறுத்திருந்து கவனிப்போம்.

60 பவுனுக்கு ஒரு பாடம்!

'அந்த வியாபாரத்தில் என்ன லாபம்?' என்று சில பேரைக் கேட்கின்றோம். இன்னும் சிலரைப் பார்த்தால் "அந்த வியாபாரத்தில் எவ்வளவு கையைப் பிடித்தது?" என்று கேட்கவேண்டும். தொட்டதெல்லாம் தங்கமாகும் சிலருக்கு. தொட்டதெல்லாம் நஷ்டமாகும் வேறு சிலருக்கு. பின்னால் சொன்ன கோஷ்டியைச் சேர்ந்தவன் ஜான் கிராஹாம் என்ற லண்டன் வாலிபனும்.

ஏதோ எலெக்டிரிக் வேலை செய்து ஜீவித்துக் கொண்டிருந்தானே அதிலேயே இருக்காமல் அவனுக்கு வோட்டு வேட்டையாட வேண்டுமென்று ஒரு ஆசை யேற்பட்டது. ஒரு ராஜீயக் கட்சியை உண்டாக்குவதென்றால் ஒரு நாள் இரவில் உண்டாக்கி விடலாம் என அவன் நினைத்து விட்டான். ஜர்மனியில் இன்று சர்வாதிகாரியாக உள்ள ஹிட்லர் ஏழே ஏழு பேருடன்தான் நாஜிக் கட்சியைத் துவக்கினதாகக் கதை யிருக்கிறதல்லவா. அந்தக் கதை யெல்லாம் மிஸ்டர் கிரஹாம் என்ற ஆங்கிலேயன் தலையைக் கிறுக்கிவிட்டது. இங்கிலாந்தில் 'பிரிட்டிஷ் நேஷனல் பார்ட்டி' என்ற ஒரு புதுக் கட்சியை நிருமிப்பதென்று அவன் தீர்மானித்து விட்டான்.

கட்சியின் முதற் கூட்டம் வெஸ்ட் மினிஸ்டர் ஸெண்ட்ரல் ஹால் என்ற இடத்தில் நடக்கு மென விளம்பரப் படுத்தப்பட்டது. அந்த ஹால் 2700 பேர்தான் கொள்ளும். கூட்டம் வந்து குவிந்துவிட்டால் என்ன செய்கிறதென்று நினைத்து வெளியே ஒலி பரப்பும் கருவிகளும் அமைக்கப் பட்டன. ஹாலுக்கு அச்சாரம் தரப்பட்டது. கூட்டத்தில் அமைதி காப்பதற்காக ஐந்நூறு பேர்களுக்குச் சம்பளம் கொடுத்து, கிரஹாம் அமைத்தான். இங்கிலாந்தில் பல கட்சிகளின் தலைவராக உள்ள சுமார் 100 பேருக்கு வரவேற்புக் கடிதங்களையும் அனுப்பினான். மார்ச் முதல் வாரத்தில் இந்தக் கூட்டம் நடந்தவுடன் இங்கிலாந்தில் ஒரு பெரிய கிளர்ச்சி ஏற்பட்டு விடுமென கிரஹாம் நினைத்துவிட்டான்.

குறிப்பிட்ட சரியான நேரத்தில் புதிய கட்சியின் ஸ்தாபகர் அந்த ஹாலுக்குள் புகுந்து பார்த்தார். 2700 பேர் இருக்கவேண்டிய அந்த ஹாலில் மூன்றே மூன்று பேர்தான் உட்கார்ந்திருந்தார்கள். ஐயோ பாவம்! கிரஹாமின் முகம் தொங்கிப் போய்விட்டது. ஆகவே அவன் மேடைமீதேறி "இன்று அநேக இடங்களில் கூட்டங்கள் பல நடந்து கொண்டிருப்பதால் இங்கு யாரும் வரவில்லை போலிருக்கிறது. இங்கு விஜயம் செய்த அன்பர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனம். கூட்டம் ஒத்திவைக்கப் பட்டது" என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

இந்தப் புதிய கட்சி ஸ்தாபகரைத் தேடித் தேடிப் பத்திரிகா நிருபர் பிறகு அலையவேண்டிய தாயிற்று. மிஸ்டர் கிரஹாமுக்கு அந்த ஒருநாள் கூட்டம் ஏற்பாடு செய்ததற்காக மொத்தத்தில் 60 பவுன்கள் செலவாயிற்றாம். 60 பவுன் செலவு செய்து ஒரு நல்ல பாடத்தைக் கிரஹாம் கற்றுக்கொண்டு விட்டான். ராஜீயக் கட்சி ஒரே இரவில் ஸ்தாபிக்க முடியாத சமாசாரம் என்பது அவனுக்குத் தெரிந்தது. இந்தியாவிலும் அநேக கிரஹாம்கள் இருக்கின்றார்களல்லவா, அவர்களும் பாடம் கற்றுக் கொள்வார்களாக!

மகாத்மா காந்தி எழுதியவை

	ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரும்மசரியமும்	0	6	0
மகா தியாகம்	0	4	0
அனசக்தி யோகம்	0	4	0
ஹிந்து தர்மம்	0	2	0
கீதா போதனை	0	2	0
உத்தம வாழ்க்கை	0	2	0
ஆரோக்கிய வழி	0	4	0
நீதி தர்மம்	0	2	0
சத்திய சோதனை முதற் பாகம்	1	8	0
சத்திய சோதனை இரண்டாம் பாகம்	2	0	0

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,

திருவல்லிக்கேணி, சென்னை.

தன் மதிப்பு

('திலீபன்' எழுதியது)

பலவானுக்குத் தைரியமுண்டு; அன்புடையவனுக்கு நேசருண்டு; ஆசையுடையவனுக்குப் போக இன்பமுண்டு. சில பண்புகள் செப்பனிடப்பட்டால், சில விளைவுகளும் உணர்வுகளும் தாமே ஏற்படுகின்றன. "உனக்குத் தைரியம் வேண்டுமா? பலத்தை வளர்த்துக் கொள். நேசர் வேண்டுமா? அன்பை வளர்த்துக் கொள்" என்றுதான் நாம் ஒருவனுக்குச் சொல்லலாம். இடையிலே செய்யப் படவேண்டிய முயற்சிகளையும் நாம் வகுத்துக் கூறலாம். தைரியமென்ற விளைவைப் பெற, பலம் என்ற மூல தனம் வேண்டும். அதனையடைய, முயற்சிகள் வேண்டும். பண்புகள் பல செம்மை செய்யப்பட்டாலன்றி, உயரிய உணர்ச்சிகளெனும் மலர்கள் பல அலர்வதில்லை. உணர்ச்சிகள் யாவற்றுக்கும் உரம் கொடுப்பன, செம்மை செய்யப் பட்டு வளர்த்துக் கொள்ளப் பெற்ற பல பண்புகளேயாகும்.

* * *

'செருக்கு' என்ற சொல்லின் நயமான பெயராகவே 'தன் மதிப்பு' என்ற பதத்தைக் கருதவேண்டும். மிக நல்ல பொருளிலே 'செருக்குப்' பயன் படுவதுண்டு. செருக்கின் புதிய பெயர் —நாகரிகப் பெயர்—'தன்மதிப்பு'. தன்மதிப்பு என்பது ஓர் உணர்ச்சி. இந்த உணர்ச்சி, மனிதர்களுக்கு அவசியமான ஒன்றுதான். இவ்வுணர்ச்சி பல மேலான காரியங்களை ஆற்றும் தூண்டுதலை அளிப்பது; பல நெருக்கடியான சந்தர்ப்பங்களில், மனிதனைக் காப்பாற்றி, உயர்வடையச் செய்வது.

* * *

தன் மதிப்பைப் பற்றி ஜே. எச். நியூமான் என்ற சிறந்த ஆசிரியர் ஒருவர் மிக நன்றாகச் சில வார்த்தைகள் சொல்லியிருக்கிறார். தற்கால அறிவுத் தெளிவுத் தத்துவம், செருக்கிற்கு ஓர் பயிற்சியைத் தருவதாக அவர் கருதுகிறார். "செருக்கு என்ற உணர்ச்சி, வீணாய் அழியாமல், நல்ல உபயோகம் பெறும் பொழுது ஓர் புதிய பெயரைப் பெறுகிறது; தன் மதிப்பு என்று சொல்லப்படுகிறது. உழைப்பு, செட்டு, நாணயம், கீழ்ப்படிதல் ஆகிய நெறிகளில் அது செலுத்தப் படுகின்றது; நம்முடையதைப் போன்றதோர் காலத்தில் சமயத்திற்கும் ஒழுக்கத்திற்கும் ஆதாரமாயிருந்து மதிக்கப் பெறும் முக்கிய அம்சமாகவும் அது அவற்றிற்கு அமைந்து கிடக்கின்றது. அது உயர்ந்தவரிடமும், தாழ்ந்தவரிடமும், கற்புக்குக் காவலனாகவும், உண்மைக்கு உத்திரவாதியாகவும் இலங்குகின்றது. பிராடஸ்டண்டுக் கிருஸ்தவர்களின் குடும்பத் தெய்வமாயிருந்து, பணிப் பெண்ணிடம் சுத்தத்தையும் விநயத்தையும் தூண்டுகிறது; வீட்டெஜமானியிடம், பொருத்தமான நடைமுறைகளையும் நேர்த்தியான பாவனைகளையும் உண்டாக்குகிறது; மனைத் தலைவனிடம் நேர்மையையும், ஆண்மையையும், தயாளத்தையும் எழுப்புகின்றது" என்பது நியூமான் கருத்து.

* * *

ஆனால், இந்தத் தன்மதிப்பு எப்படி உண்டாகும்? தன்மதிப்பு மனிதர்களுக்கு உண்டாவதற்கு, ஒரு திடமும், தகுதியும், இடமும் வேண்டும். எனினும், தன்மதிப்பைப் பற்றியே பல தவறான அபிப்பிராயங்கள் இப்பொழுது உண்டாயிருக்கின்றன. நியூமான் கூறும் தூண்டுதல்களைத் தன்மதிப்பு உண்டாக்க வேண்டுமென்பதை, அநேகர் எண்ணுவதில்லை. தன்மதிப்பு, பதப்படுத்தப்பட்ட செருக்காக இல்லாமல், கட்டுக்கு அடங்கா அகங்காரமாகப் பரிணமிக்கும் மார்க்கத்தையே, தன் மதிப்புக்கு வழியெனப் பற்றுவோரு மிருக்கிறார்கள்.

* * *

வாழ்வை இனிக்கச் செய்யும் தன் மதிப்பை எங்கே காணலாம்? காந்தி முதன்முறை தமது சத்தியாக்கிரகப் போரைத் துவங்குமுன் வைசிராய் இர்வின் பிரபுவுக்கு ஓர் காகிதம் எழுதினார். இடையிலே அவர் அதில், "அவ்விஷயங் குறித்துச் சிந்திக்கும்படி, உங்களை முழந்தாற் படியிட்டு நான் வேண்டிக் கொள்ளுகிறேன்" என்று, உருக்கத்துடன் எழுதினார். காந்தியின் தன் மதிப்பு, இந்த மனமிளக்கும் விநயத்தில் கலந்து ஒளிராது போகவில்லை. இயேசுப் பெருமான் தாம் கைதியாகப் பிடிபடப்போகும் சமயத்தில், தமது சிஷ்யர்களின் கால்களைக் கழுவினார். "யார் பெரியவன் என்ற விவாதத்திலல்ல, பணிவிலேயே பெருமையுண்டு" என்ற அவரது உபதேசம் பொருளற்றதல்ல.

* * *

தன்மதிப்பு என்றால், தனக்குத் தானே மரியாதை செய்து கொள்ளுதல் என்று பொருளல்ல. சுவாமியாயிருந்தாலும் கூடத் தனக்குத்தானே தூபதீப நைவேத்தியம் செய்து கொள்ளுவது சுகப்படாது. நான் ஒரு இடத்திற்குச் செல்லுகிறேன். அங்குள்ளவர் எனக்கு ஓர் நாற்காலி யளிக்காவிட்டால், அவர்களை நான் வேண்டுவதோ, அல்லது நானாக ஓர் பீடத்தை இழுத்து அமர்வதோ எனக்குத் தன் மதிப்பைத் தந்துவிடாது. அந்த இடத்தைவிட்டு மௌனமாக நான் அப்பாற் செல்லுவதே எனது தன்மதிப்புக்குப் பாதுகாப்பாகும். தன்மதிப்பு என்பது பிறர் கொடுக்க வருவதன்று. தன் மதிப்பு, பிரித்து வழங்கும் ஓர் சாமானல்ல. தன்மதிப்பு, தன் தகுதிக்கும் அந்தஸ்துக்கும் பொருந்த நடக்கும் ஒழுக்க நடைமுறைகளில் பிரகாசிக்க வேண்டிய ஓர் உணர்வாகும்.

* * *

தன்மதிப்பு, ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வொரு விதத் தூண்டுதலை யளிக்கும். பணிப் பெண்ணின் தன்மதிப்பு, அழகும் ஒளியும் புலப்படுத்தும் பணிவாகவிருக்கும். ஆனால், தீ நெறி புகுத்தும் தீய கட்டளைகட்கு இணங்காதிருப்பதும் பணிப்பெண்ணின் தன் மதிப்புக் குரியதாகும். எஜமானனின் தன்மதிப்பு, தனக்கு நஷ்டம் வரினும் அறமுறை வேண்டும் நியாயமும், ஆண்மையும், அன்புமாகப் பரிணமிக்கும்.

* * *

'செருக்கைப் பற்றி, அமெரிக்க

வேதாந்தி எமர்ஸன் கூறுகிருர் :—“செருக்கு அழகியது ; செட்டானது. செருக்கு, அநேகத் தீய குணங்களை ஒழித்து விடுகின்றது ; தன்னைத் தவிர வேறெதுவும் பிழைத்திருக்க இடந் தருவதில்லை ; இதை நோக்கி, இதை விட்டு வீண் பெருமை கொள்ளும் தன்மையைப் பதிலாகப் பெறலாம் போல் தோன்றுகின்றது.” மேலும் அவர் கூறுவதாவது :—“செருக்குடையவர், பணியாளரின்றி வாழ்வர் ; காலால் நடந்து பிரயாணம் செய்வர் ; ஏழைகளுடன் சம்பாஷிப்பர் ; நேர்த்தியான அறைகட்குள் மௌனமாக அமர்ந்து திருப்தியுங் கொள்வர். ஆனுல், வீண் பெருமையிலே பணச் செலவு உண்டு—இந்த ஒரே ஒரு குறை தான். செருக்குடைய ஜனங்கள், சகிக்க முடியாத அளவு தன்னயக்காரர்களாக இருக்கிருர்கள் ; வீண் பெருமைக்காரரோ, தயாளமும் ஈகையும் உடைட்யோரா யிருக்கிருர்கள்.”

*   *   *

செருக்கு, வீண்பெருமை இவ்விரண்டிலும் உள்ள நல்ல தன்மைகளை யெல்லாம் இசைத்துப் பண்படுத்திய ஓர் உணர்வு, தன்மதிப்பு என்னலாம். தன்மதிப்பு ஏழையுடன் சம்பாஷிப்பது மட்டிலுமல்ல, ஈகையும் அருளுமாகவும் அவரிடம் அணுகும். ஆனுல், தனவந்தர்களைக் கண்டு, ஓட்டம் பிடிப்பதுமில்லை. அங்கேயும் தலை நிமிர்ந்து நிற்கும் ; ஆனுல், பெயருக்காக, அங்கு காணிக்கை செலுத்தாது. தன்மதிப்பு, தனக்குள்ளதையும் உரிமையையும் உணர்ந்து செயல் செய்யத் தூண்டுதல் அளிக்கும்.

*   *   *

இந்தத் தன்மதிப்பை ஜனங்களுக்கு எப்படி உண்டாக்குவது? வெறும் உபதேசத்தால் ‘தன்மதிப்பு’ ஜனங்களுக்கு உண்டாகிவிடாது. தன்மதிப்புக்காகவென்றே ஆவேசமாகக் கிளர்ச்சி யொன்று செய்வதாலும் அது உண்டாகி விடாது. தன்மதிப்பு, தனித்து நிற்கும் உணர்ச்சியல்ல. சுய நிர்ணயத்திலே தன்மதிப்பு உண்டு ; தன்னம்பிக்கை கொண்ட செயலிலே தன்மதிப்பு உண்டு ; தனது அந்தஸ்தை உண்மையிலே உயர்த்தும் தனது முயற்சியிலே தன்மதிப்பு உண்டு. ஆனுல், பொட்டணமாகக் கட்டி, தபால் சிப்ப உருவத்தில் ஒவ்வொருவருக்கும் வழங்கிவிடக்கூடிய தன்மதிப்பு ஒன்று கிடையாது. இந்தியாவின் சுயராஜ்யக் கிளர்ச்சியில் தன் மதிப்பு உண்டு ; சமுதாய வாழ்வை மேன்மையுறச் செய்யும் முயற்சியில் தன்மதிப்பு உண்டு ; தனி மனிதன் தனது வாழ்வை உண்மையும், நாணயமும், அடக்கமும் உடையவனுக வாழ்வதில் தன்மதிப்பு உண்டு.

*   *   *

தன் மதிப்பை இலவசமாக யார் பெற முடியும்? இரப்பவனைத் தன்மதிப்புடையவனுக்க, உபதேசித்தால் பயன்படுமா? அவன் வாழ்வை உயர்த்தும் முயற்சியன்ரு வேண்டும்? தகுதியற்றவனுக்குப் பதவி யளித்தால், தன்மதிப்பு உண்டாகிவிடுமா? அவனுக்குத் தகுதியை உண்டாக்குவ தன்ரு தேவை? அயல் வீட்டான் நல்வாழ்வு வாழின் அவனிடம் பொருமை கொண்டு பகைப்பதில் தன்மதிப்பு இல்லை ; அவனையும் பின் தங்கச் செய்யும் போட்டியிலேதான் தன்மதிப்பு உண்டு.

Have your Majestic figures at
R. DASEN'S ELECTRIC PHOTO STUDIO.
"The Best" and most up-to-date style and finish.
Artists & Bromide Enlargers & Oil Painters.
55, Rattan Bazaar Road,
G. T., MADRAS.

ராம் மோஹனுடைய
வட இந்தியா யாத்ரா ஸ்பெஷல்
(பதினேன்ருவது யாத்திரை)
1934-ம் வருஷம் எப்ரல்மீ 9௳
சென்னையைவிட்டுப் புறப்படும்.
கீழ்க்கண்ட இடங்களுக்குப் போகும்.
காலவிவரம்

10	ஹரிஹர் (துங்கபத்ரைநதி)
11	கோலாப்பூர் (ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஸ்தலம்)
12	பண்டர்பூர்
13, 14, 15	பம்பாய்
16-17	நாசிக் (பஞ்சவடி திரயம்பகம்)
18	ஹோஷங்காபாத் (நர்மதை)
19	ஆக்ரா
20-21	மதுரா, பிருந்தாவனம், கோகுலம், கோவர்தனம்
22-23	டெல்லி
24, 25, 26	ஹரித்வார் (ரிஷிகேஷ்)
27	லக்னே
28	அயோத்தி, நந்திக்ராமம்
29-30	பிரயாகை (த்ரிவேணி,) அலஹாபாத்)
மேமீ	
1, 2, 3, 4, 5,	ஸ்ரீகாசி
6-7	கயா
8, 9, 10	கல்கத்தா
11	பூரி, ஜகன்னுத்
12	ராஜமஹேந்திரி (கோதாவரி)
13	பெஜவாடா (கிருஷ்ணு)
14	சென்னைக்கு திரும்பிவரும்

மேமீ 14௳
மதராசுக்குத் திரும்பி வரும்.

சார்ஜ்கள் :—
மூன்ருவது வகுப்பு ரூ. 85
இரண்டாவது வகுப்பு „ 200
மற்ற விபரங்களுக்கு எழுதவும்.
ராம் மோஹன் கம்பெனி,
21, செகண்டு லைன் பீச்சு, மதராஸ்.

வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது !!
(கிளேஸ் காகிதத்தில் அழகான பதிப்பு)
வ. வே. சு. அய்யர் எழுதிய
குருகோவிந்த சிங்கன்
(சீக்கியர்களின் வீரத்தலைவன்)
விலை அணு 4 தபாற் செலவு வேறு
சுதந்திரச் சங்கு காரியாலயம்
திருவல்லிக்கேணி, சென்னை.

குடும்ப சுகம்

ஓர் சிறு கதை

(கு. ப. ராஜகோபாலன், பி.ஏ.)

நல்ல நிலா. காவேரி மணல். ஏதோ ஊர் வம்புகளைப் பேசிக்கொண்டு பொழுது போக்கிக் கொண்டிருந்தோம்.

"கீழத் தெருவில் இன்றோர் பெண் கிணற்றில் விழுந்து பிராணனை விட்டாளாம்" என்றான் மணி.

"எதற்காக?"

"என்னவோ; ஏதாவது குடும்ப சம்பவமாய்த் தானிருக்கும். எனக்கு நமது குடும்ப வாழ்க்கை யென்பது பெரிய சிறைச்சாலையென்று தோன்றுகிறது" என்றான் மணி.

"நமது சமூகத்தைப் பற்றிச் சொல்கிறாயா?"

நாங்கள் பல பேரடங்கிய குடும்பத்தையும், பல குடும்பங்களடங்கிய சமூகத்தைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்த போது அவ்வளவு நேரம் மணலில் உலாத்திக் கொண்டிருந்த ஒரு சாமியார் எங்களருகே வந்து உட்கார்ந்தார். தாடி, மீசை நன்றாய் வளர்ந்திருந்த அந்தச் சாமியாருக்கு 40 வயதுக்கு மேலிருக்காது என்று நிலா வெளிச்சத்தில் யூகித்தேன்.

"குடும்ப வாழ்க்கைகளைப் பற்றிப் பேசுகிறாப் போலேருக்கு. சில வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு சமாசாரத்தை நான் சொன்னால் கேட்கப் பிரியமுண்டா?" என்று அவர் கேட்டார்.

"சொல்லுங்களேன்!" என்று இருவரும் ஒரே குரலில் சொன்னோம். பொழுதை எப்படியாவது போக்க வேண்டும். அதுவும் யாராவது ஒருவர் கதை சொல்லுவதென்றால் கேட்பதற்குச் சலிப்பு ஏற்படுமா? வந்தவர் மணலில் குந்திக்கொண்டு கால்களைக் கட்டிக்கொண்டு கதை சொல்ல ஆரம்பித்தார்.

"அது 12 வருஷங்களுக்கு முன் நடந்தது. இந்த ஊரில்தான் என்று வைத்துக் கொள்ளுங்களேன். நான் விசுவனாதன் என்றவனைப் பற்றிச் சொல்லப் போகிறேன். வயதில் சிறியவனானாலும் வக்கீல் தொழிலில் 'துடி' என்று பேர் வாங்கினான். நீங்கள் யோசிக்கத் தேவையில்லை. அவன் இப்போது இங்கே இல்லை."

"ஓஹோ அப்படியானால் சரி!" என்றேன்.

"அவன் மனைவியின் பெயர் விசாலம்—விசாலாட்சி—சோழ தேசத்துப் பெண். தளதள வென்று வளர்ந்த தங்க ரேக்கு மேனி அவளுக்கு—காதிலணிந்திருந்த வைரங்கள் கண்ணாடி போன்ற அவள் கன்னங்களில் சுடர் விட்டெரியும். நன்றாய்ப் பாடுவாள். அதிகம் சொல்வானேன். விசுவனாதனுக்காகவே விசாலத்தைப் பிரும்மா சிருட்டித்தான் போல இருந்தது."

"குழந்தை குட்டிகள் உண்டா?" என்று ஒரு கேள்வி போட்டான் மணி.

"வருகிறேன். இருங்கள். அநேக பெண்களை யெல்லாம் ஆராய்ந்து பார்த்து விசாலத்தை அவனுக்குப் பொறுக்கி யெடுத்தவள் விசுவனாதனின் தாயார்தான். ஏதோ 'ஒண்ணே கண்ணே' என்றிருந்த தன் குமாரனுக்குக் கல்யாணம் செய்துவைத்து ஒரு பேரக் குழந்தையைப் பார்த்து விட்டுப் போகவேண்டு மென்பது அவள் ஆசை. இது சகஜந்தானே.

"மறு வருஷம் ருதுசாந்தி யாயிற்று. நீங்களும் யுவர்களில்லையா? அந்த வயதில் விசுவனாதனும் விசாலமும் எப்படி இருந்திருப்பார்களென்பதை நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள்.

"முகம் பார்த்துக்கொண்ட வேளை என்று நமது நாட்டில் ஒரு பழமொழியுண்டு. மாமியாரும் நாட்டுப் பெண்ணும் நல்ல வேளையில் முதலில் சந்திக்கவில்லை யென்று தெரிந்தது—நமது நாட்டின் வேதாந்தத்தின் விசேஷ மென்ன தெரியுமா?" என்றார் சாமியார்.

"சுற்றிச் சுழி வரும் சக்கிரம் போல—சுழலும் தர்க்க ரீதியில்" என்று நான் கூறினேன்.

"அது சரி!" என்று சிரித்துவிட்டு, "நான் எண்ணிக் கொண்டிருப்பது துவந்த பாவம். அதாவது இரட்டைத் தன்மை———

"உலகத்தில் எதை ஆராய்ந்தாலும் அத்தன்மை யுடையதாகத்தான் இருக்கும்—ஜனன மரணம், சுக துக்கம், இரவு பகல், ஆண் பெண்—அவைகளில் இது ஒரு துவந்தம்—மாமியார்—நாட்டுப் பெண், தென்னிந்திய மண்ணில் உதித்த இரண்டு தத்துவங்கள்.

"அரச மரத்தடிகளி லிருக்கும் 'நாகர்'களைப் பார்த்திருக்கிறீர்களா? இரண்டு பாம்புகள் ஒன்றில் ஒன்று சுற்றிக் கொண்டு தலை எடுத்து ஒன்றை ஒன்று சீறி நிற்பது போன்ற சிலையைக் கவனித்திருக்கிறீர்களா? ஒரு உபமானத்திற்காகத்தான் இதை எடுத்துக்கொண்டேன். குடும்ப புருஷனாகிய கல்.... அவனைச் சுற்றி அவனை விடாது நெருக்கிக் கொண்டிருக்கும் இரண்டு பாம்புகள் ஒன்றையொன்று தாக்கிக் கொண்டே இருக்கின்றன. உபமானம் பொருந்தின மட்டில் போதும்; என்ன? விஷயத்தைச் சொல்லாமல் எதற்கோ பீடிகை போடுகிறேனென்று நினைக்கிறீர்களா?

"இயற்கையில் விசாலமாவது அவளுடைய மாமியாராவது 'கெட்டவர்'களல்ல, பாம்புகளல்ல. குடும்பம் ஏற்பட்ட அன்றைக்கிருந்தே மாமி என்பவளுக்கும் நாட்டுப் பெண் என்பவளுக்கும் கக்ஷி யெண்ணம் தலை யெடுத்து விடுகிறது."

"பரஸ்பர நோக்கங்களின் வேற்றுமை" என்றான் மணி.

"நோக்கமாவது தூக்கம்! அது வேறா இருக்கிறது? பரஸ்பர அசூயை. அதுதான் சந்தித்த நிமிஷ முதல் ஆரம்பம் என்றேனே. நெருப்புப் புகைந்துகொண்டே இருந்தது. ஊதி விசிறி விடப்பட்டுப் பெரிய ஜ்வாலையாயிற்று. முதலில் அவர்களுக்குள் அந்தரங்கமான விரோதம் — அது படிப்படியாக விருத்தி யடைந்ததை வர்ணிக்க இப்பொழுது சாவகாசமில்லை. அடுத்த காக்ஷியில் விசுவத்தின் முன்பே தீ ஒளி வீசுகிறது. விசுவம் அதைக் கவனிக்காதது போல் பாசாங்கு செய்கிறான். அடுத்த காக்ஷி, அவனெதிரில் யுத்தம். மாமியார்

வாய் பேசும் எதிரி; நாட்டுப் பெண் மௌனமான எதிரி. விசுவம் இரு கக்ஷியையும் ஆதரிக்காமல் கொண்டு செலுத்திவிடலாமென்று எண்ணி, தாயார் பேச்சையும் மனைவி பேச்சையும் இடங்கொடாமல் வெகுநாள் அலக்ஷியம் செய்து வந்தான்.

"ஒரே சிறு விஷயத்தை உதாரணமாகச் சொல்லிவிட்டு மேலே போகிறேன். விசாலம் ஒரு நாள் எண்ணெய்ப் பாத்திரத்தை உறியிலிருந்து எடுக்கும்பொழுது கை வழுக்கிக் கீழே போட்டுவிட்டாள். மாமியார் தூங்கிக்கொண்டிருந்தாள். விசாலம் உடனே தன் கோட்டைக்குள் புகுந்துகொண்டு முற்றுகையைத் தாக்க வேண்டிய தந்திரங்களைப் பற்றி யோசிக்கலானாள். தானே முந்திக்கொண்டு மாமியார் எழுந்தவுடன், 'உறியில் பூனையேறி எண்ணெய்ச் செம்பைக் கீழே தள்ளிவிட்டது அம்மா!' என்றாள்.

"பரஸ்பர மனப்போக்கை ஊகிக்கும் அப்பியாசத்தால் நாட்டுப் பெண் தன் கண்ணில் மண்ணைப் போடப் பார்க்கிறாளென்று மாமியாருக்குப் பட்டவுடன் யுத்தப்புலன் சீறிக்கொண்டு கிளம்பிற்று. ஆகையால் அவள் விஷயத்தை அத்துடன் நிறுத்தவில்லை.—நிறுத்திவிட்டால்தான் குடும்பத்தில் ஒன்றுமே இருக்காதே. 'பூனை உறிக்குத் தாவ முடியாதே? உறி உயர அல்லவா இருக்கிறது?'

"'தாவிற்று. நான் பார்த்தேன்'

"'பார்த்துக் கொண்டா சும்மா இருந்தாய்?'

"'நான் விரட்டுவதற்குள் தள்ளிவிட்டது.'

"உறிதான் நெருங்கியிருக்கிறதே, எப்படித் தள்ளும்? அதற்குக் கையா இருக்கிறது? ஐம்பது வயதைக் கொட்டை பரப்பியிருக்கிறேன். நீ நேற்று முளைத்த முளை! என்னைப் பைத்தியமாக்கப் பார்க்கிறாய்?'

"போதாதா ஒருவர்மேல் ஒருவர் தொடுக்கும் பாணங்கள்?"

"இது யாருடைய பிசகென்கிறீர்கள்?" என்றான் மணி.

"நீங்கள்தான் சொல்லுங்களேன்."

"நாட்டுப் பெண் என் அனாவசியமாக நம்ப முடியாத பொய்யைச் சொல்ல வேண்டும்? அதுதானே மாமியாருக்குக் கோபம்" என்றான் மணி.

"மாமியார்தான் ஏன் இவ்வளவு சொல்லவேண்டும்? இதை எதிர்பார்த்துத்தானே அவள் பொய்யாவது சொல்லித் தப்பிக்கலாமென்று பார்த்தாள்? ஆகையால் பிசகு இரண்டு பக்கத்திலுமிருக்கிறது....விசுவம் என்ன செய்வான்? தாயாரைப் பார்த்தால் 'உம்' மென்றிருக்கிறாள். மனைவியைப் பார்த்தால் 'உம்' மென்றிருக்கிறாள். தன் சௌக்கியம் குலைந்தாலும் குலையட்டும்; இருவரும் ஒற்றுமையாயிருந்தால் போதுமென்று யார் எது சொன்னாலும் பொறுத்துக் கொண்டிருந்தான்.

"எது, நாழியாகி விட்டதுபோலிருக்கிறதே! கதையைச் சுருக்கிச் சொல்லிவிடுகிறேன். ஒரு நாள் சாயந்தரம் விசுவம் சலித்த மனதுடன் வீட்டிற்குத் திரும்பினான். அன்று கேஸ் தோற்றது. ஜட்ஜும்கூட ஏதோ இவனுடைய அஜாக்கிரதையைப்பற்றிக் கடினமாகச் சொல்லிவிட்டார். என்றுமில்லாமல் தாயார் வாசல் திண்ணையில் உட்கார்ந்திருப்பதைத் தூரத்திலேயே பார்த்துவிட்டான். ஏதோ புயலென்று ஊகித்து விட்டான். தாயார் வாயெடுப்பதற்கு முன் உள்ளே போய்விடலாமென்று வேகமாகப் படியேறினான்.

"'இந்தாடா விசு! இனிமே இந்த வீட்டிலே நானிருக்க முடியாது' என்றாள்.

"'என்னம்மா செய்யச் சொல்லுகிறாய்?' என்று தாக்கப்பட்ட நாய்போல் விழுந்தான்.

"'உம். எனக்குத் தெரியுமே இதுவருமென்று. இல்லாட்டா அவள் அவ்வளவு தைரியமா என்னைப் பேசுவளா?' என்று சொல்லி அவன் தாயார் மலமலவென்று கண்ணீர் உதிர்த்து விம்ம ஆரம்பித்தாள். விசுவத்திற்குக் கோபம் ரௌத்ராகாரமாகப் பொங்கிற்று. விர்ரென்று உள்ளே பாய்ந்தான். சமயலறையில் விசாலம் அடுப்பை ஊதிக்கொண்டிருந்தாள். அதனாலோ என்னமோ முகம் சிவந்து கண்களில் ஜலமிருந்தது.

"'அம்மாவை என்னடி சொன்னாய்? ஒன்றும்—சொல்லாதே என்று எவ்வளவு தரம் சொல்றது?' என்று சொல்லிக்கொண்டே—எனக்கு இப்பொழுது சொல்லக்கூடக் கூச்சமாகவிருக்கிறது—அவளை அடித்தான். முதுகில் அடிக்க ஓங்கின கை, அவள் குபீரென்று எழுந்து நின்றதால், விலாவில் வந்து வேகமாகத் தாக்கிற்று.

"ஐயோ என்று துடித்துக்கொண்டு கீழே உட்கார்ந்து விட்டாள் விசாலம்.

"விசுவத்தின் கோபம் பறந்துபோய், தான் செய்துவிட்டதைப் பார்த்துப் பிரமித்து அப்படியே நின்றுவிட்டான்.

"விசாலத்துக்கு அப்பொழுது எட்டு மாதம்—நான் இதைச் சொல்லவில்லையோ? கிடக்கட்டும். சத்தத்தைக் கேட்டுவிட்டு மாமியார் உள்ளே ஓடிவந்தாள். அவள் இதை எதிர்பார்க்கவில்லை

"'அட சண்டாளா, பிள்ளைத்தாச்சியை என்னடா பண்ணினே, பாவி?' என்று நாட்டுப்பெண்ணிடம் சென்று பார்த்தாள். ஜாஸ்தி விஸ்தாரமாக இங்கே சொல்லத் தேவையில்லை. அவர்கள் பயந்தவாறே மறுநாள் ஜுரம் கண்டது. டாக்டரும் நர்ஸும் வந்து பார்த்து அன்றே செத்த சிசுவை வயிற்றில் 'ஆபரேஷன்' செய்து எடுத்தார்கள். அன்றிரவே ரண ஜன்னி பிறந்துவிட்டது. கலியாணத்துக்குப் பிறகு அன்றுதான் முதல் முதலாகப் பகிரங்கமாக விசுவம் விசாலத்தின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான்.

"'டாக்டர் என்ன சொன்னார் சொல்லுங்களேன். நான் பிழைப்பேனா?' என்று விசாலம் சோர்ந்து கேட்டாள்.

"'விசாலம்!' என்று சொல்லிவிட்டு விசுவம் கண்ணீர் சொரிந்தான்.

"'அழவேண்டாம்! நீங்கள் என்ன பண்ணுவீர்கள்?' என்று அவன் கையை யெடுத்து ஆற்றுவதுபோலத் தடவினாள். சற்று நேரத்திற்கெல்லாம் ஜன்னியின் சின்னங்கள் ஏற்பட்டன.

"'நான் பாலைக் கொட்டல்லேம்மா! அவா கிட்டே சொல்ல வேண்டாம். அவா முகத்தை நான் எப்படிப் பார்ப்பேன்?....என்னோடே பேசப்படாதா? நான் ஒண்ணும் பண்ணல்லியே....... இனிமேச் சொன்னபடி கேட்கிறேன்' இப்படி இரண்டு மணி நேரம் பிதற்றினாள்.

"'வெங்கடரமணஸ்வாமி! துள்ளி எழுந்திருக்கச் செய். உன் சன்னிதிக்குக் கூட்டிக்கிண்டு வறேன்' என்று வேண்டிக்கொண்டாள் மாமியார்.

"விடியற்காலையில் விசாலத்திற்குத் திரும்பவும் பிரக்ஞை வந்தது.

"'ஐயோ இடுப்பில் என்னமோ செய்கிறதே! செத்தெப் பிடியுங்களேன். இன்னுங்கூடவா வெக்கம்?' என்றாள்."

அந்தச் சமயம் கதை சொன்னவரின் குரல் தழதழத்தது போல என் காதில் பட்டது.

புதிய விஷயம்

(''ராஜாத்தி''யின் கடிதம்)

தோழி ரங்கம்!

'ராங்கி' என்றதும் உனக்கு மூக்குக்குமேல் கோபம் வந்து விட்டது. ஆனல், மறுபடியும் ஒரு கடிதத்துக்கு விதியில்லை. இதென்ன நியாயம் என்று கேட்கிறேன். 'சோம்பேறி' என்று சொல்லட்டுமா? என்ன சொன்னாலும், ஒரு கேலிச் சிரிப்புச் சிரித்துவிட்டுச் சும்மா இருப்பது உனக்கு வேண்டுமானல், அழகாயிருக்கலாம். எனக்கென்னவோ உன் கடிதத்தில்தான் ஆசை. ஒருக்கால், திரும்பத் திரும்ப ஒரே 'கீர்த்தனத்'தைப் பாடுவது உனக்குப் பிடிக்கவில்லை போல் தோன்றுகிறது. இருக்கலாம்; பெண்கள் சுதந்திரமே தியானமா என்று நினைக்கிறாய்போலிருக்கிறது. வேண்டாமே; வேறு எதைப் பற்றியாவது எழுதேன். நான் கூட ஒரு புதிய விஷயத்தைக் கண்டுபிடித்திருக்கிறேன். பொருள் புதியது; ஆனல், நிகழ்ச்சி பழையதுதான். சில பெண்களுக்குக் கொஞ்சம் புளிக்கவும் கூடியது.

சுதந்திர மென்பது இன்றைக்கு நாளைக்கு நடக்கக்கூடிய சங்கதியா? பல்லாயிர வருஷங்களாகத் தேடிக் கொண்ட சொத்தல்லவா இந்தப் பந்தம்? சுலபத்தில் எப்படி இதை ஒழிக்க முடியும் என்று உனக்குச் சோர்வு உண்டாகக் கூடும். அதோடு கூட, 'இருப்பிடம் வைகுந்தம்' என்ற வேதாந்தமும் உன்னைச் சூழ்ந்திருக்கக் கூடும். இப்படிப்பட்ட மனோபாவம் ஏற்படும்பொழுது, வேறு சுருதிகளைக் கொஞ்சம் பிடித்துத்தா னாக வேண்டும். தவிர, ரயில் பிரயாணம் செய்பவள் சதா சர்வதாத் தனது ரயில் பிரயாணத்தையே 'ஜபம்' செய்து கொண்டிருக்கிறாளா? 'பழனிச் சண்முகவேலுண்டு' பாட்டைச் சற்றுக் கேட்க வேண்டியிருக்கிறது. பக்கத்தி லிருப்பவளுடைய யோக க்ஷேமம், குழந்தை குட்டிகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்களை அறிய வேண்டியிருக்கிறது. அடுத்த 'ஸீட்டி'லிருப்பவன் சுருட்டுப் புகையைக் கண்டு சிறிது முகஞ் சுளிக்க வேண்டியிருக்கிறது. இப்படியெல்லாம் நடந்தால்தான் பிரயாண சிரமம் தோன்றாது. குடும்பம், நாடு, நகரம், சட்டம், சாஸ்திரம் முதலிய விவகாரங்களின் உபத்திரவமே யில்லாத ஜெயில் வாழ்க்கையாய்த்தான் இருக்கட்டுமே; துணை வேண்டித்தான் இருக்கிறது, ஆடல் பாடல் தேவையாய்த்தா னிருக்கிறது.

சரி, சொல்லவந்த விஷயம் மறந்து விட்டதே. நீயும் நானும் இஷ்டப்பட்டாலும், இஷ்டப்படா விட்டாலும், காலம் என்னவோ மாறித்தான் வருகிறது. நீ வேண்டாமென்றால், லோதியன் பிரபுவின் யாதாஸ்து நிற்கிறதா? பீகம் ஷா நவாஸ் சும்மா இருக்கிறாளா? சரோஜினிதேவி பேசாதிருக்கிறாளா? அவர்களெல்லாம் செய்யும் வேலை நம் தலையில்தான் வந்து விடிகிறது. நாம் செய்யுங் காரியங்களோ நமது அடுப்பங்கரையோடு முடிந்து விடுகின்றன. வெளியில் வந்தால்தானே இரண்டிலொன்று பார்க்க முடியும்? அதுவே சரிப்படாது என்றால், பிறர் செய்யும் காரியமா யிருந்தாலும் அதன் பலாபலன் நம்மை விடப்போகிறதா? பீஹாரிலே பூமி அதிர்ச்சி உண்டாச்சு. ''அது மாட்டுக்கு நடக்கட்டுமே'' என்றிருக்க முடிகிறதோ? தேசத்தின் பெருமையைப் பல அடிகள் உயர்த்திய மாபெருந் தலைவன் காந்தி அங்கே ஓடியிருக்கிறார். தேசத்தைக் கடவுளே தங்களிடம் ஒப்படைத்திருப்பதுபோல் உரிமை கொண்டாடி வரும் ஒரு நாட்டு ஜனங்களின் பிரதிநிதியான வைசிராயும் அங்கே ஓடுகிறார். நமக்கென்ன என்று நாம் வீட்டுக்குள் அடைத்துக் கிடப்பது பத்திரமாயிருப்பதாய்த் தோன்றும். ஆனல், நம்மை ஆட்டிவைக்கும் சகல சங்கதிகளும் நம்முடைய சொந்த 'மேக்' அல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்.

அதற்காகப் பூராவும் கால தேச வர்த்தமானங்களுக்கே அடிமையாகி விடவேண்டு மென்று நான் சொல்லுவதாக எண்ணி விடாதே. அப்படி ஆகக்கூடாது என்பதற்கு எச்சரிக்கைதான் நான் சொல்லுவது. வரப்போகும் விளைவுகளில் நமது பங்கும் கொஞ்சம் உண்டு என்ற பெருமை நமக்கு ஏன் சிறிது இருக்கக் கூடாது? ஸேது பந்தனத்தில் அணிற்பிள்ளையின் முயற்சியும் கொஞ்சம் கலந்திருப்பதாகப் பாகவதர்கள் கதை செய்வது எவ்வளவு அழகாயிருக்கிறது!

மறுபடியும் சொல்ல வந்த விஷயத்தை நான் மறந்துவிட்டேன். அதனல் என்ன மோசம்? அந்தப் புதிய விஷயத்தை அடுத்த கடிதத்தில்தான் எழுதுகிறேனே. நாம் பொறுமைக்காகவே ஜன்ம மெடுத்திருப்பதாய்ச் சொல்லுகிறார்கள். நாமும் எத்தனையோ விஷயங்களில் பொறுத்துக் கொண்டு தானிருக்கிறோம். ஆகையால், ஒன்றிரு வாரம் கழித்து எனது புதிய விஷயத்தைக் கேட்கலாகாதா?

உனதன்பார்ந்த, ராஜாத்தி.

''முகத்தை நன்றாகப் பார்க்கலா மென்றால் அவனது கண்களில் அப்போது நீர் வடிந்துகொண்டிருந்தது. விசுவம் இடுப்பை மெல்லத் தடவிக் கொடுத்தான். விசாலம் குடும்ப வாழ்க்கையையும் உலக வாழ்க்கையையும், மற்றொரு மூச்சுடன் நிறுத்திக்கொண்டாள்.''

''அடாடா! அவ்வளவு முரட்டுத்தனமாகவா அடிப்பது?'' என்று நாங்கள் ஏக காலத்தில் அனுதாபப்பட்டோம்.

''அது உங்கள் அபிப்பிராயம்; அல்லவா? அவனும் ஒரு வேளை சாவகாசமாகச் சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்து யோசனை செய்தால் நீங்கள் சொல்வது சரியென்றுதான் ஒப்புக்கொள்வான், சந்தேகமில்லை. இருக்கட்டும். அவன் குற்றவாளிதான். ஆனல் அந்த உத்தமி விசாலத்தின் பொறுமையால் ஒரு மனிதக் கோர்ட்டும் அவன்மேல் தீர்ப்புச் செய்யவில்லை. நீங்கள் அவனை எப்படிச் சிக்ஷிப்பீர்கள்?''

நாங்கள் மௌனமாக விருந்தோம்.

''அவன் தனக்குத் தீபாந்திர சிக்ஷை கொடுத்துக் கொண்டிருக்கிறான். பரதேசியாகப் பிழைக்கிறான்.''

''அவரைப்பற்றி இவ்வளவு விஸ்தாரமாக——?'' என்று கேட்டேன் நான்.

''அது தெரிந்து உங்களுக்கென்ன ஆகவேண்டும்? நான்தான் அவன் என்று வைத்துக் கொள்ளுங்களேன்'' என்று சொல்லி விட்டு எழுந்து வேகமாக மேற்கே போய்விட்டார் சாமியார்.

லஞ்சம்

(அசுவதி எழுதியது)

'நியாயமோ அநியாயமோ, சரியோ தப்போ, கவலையில்லை; அநுகூலம் நமக்கே ஏற்படவேண்டும்; நமது காரியம் விரைவில் நிறைவேறிவிட வேண்டும்; அதற்கு ஏது வழி" என ஆராய்பவன் ஒருவனுக்கும், ஏது எப்படிப் போனாலென்ன, நமக்குத் தட்டு வருகிறதல்லவா என்றெண்ணி, நியாய உணர்ச்சியைப் பறிகொடுத்து விட்டுத் தனது மனச்சாக்ஷியை விற்பதற்குத் தயாராக விருப்பவன் ஒருவனுக்கும், ஒரு புது உறவு முறைமையை ஏற்படுத்தி விடுவது லஞ்சம். நடு நிலைமை தவறி, பாரபக்ஷமற்றிருக்கவேண்டும் என்ற இயற்கை நியதியைப் புறக்கணித்து விட்டு, கைம்மாறு பெற்றோ எதிர்பார்த்தோ, மனிதன் ஒழுக்கம் கெட்டு அலைவதற்கு ஏதுவாக விருப்பதும் லஞ்சம் தான். உதவி அல்லது சலுகையை எதிர்பார்க்கும் ஒருவன், யாரிடமிருந்து எதிர்பார்க்கிறானோ அவனுடன் செய்து கொள்ளும் ஏற்பாட்டை நாம் பேரம் என்கிறோம். பேரத்தின் பயனாக எழுந்தது லஞ்சம். பேரம் என்பது மிருதுவான வார்த்தை. லஞ்சம், கைக்கூலியென்பன கடுஞ் சொற்கள். வித்தியாசம் அவ்வளவுதான்; அர்த்தம் ஒன்று தான்.

நிற்க, அப்படி வாங்கும் காசு கசக்குமா வென்று சிலர் கேட்கலாம். ஸ்வாமின்னு! கசக்காது; தித்திக்கத் தான் செய்யும். வேண்டுமானால் கடித்துப் பாருங்கள். ஆனால் ஒரு கணம் உங்கள் சிந்தனா சக்தியை உபயோகியுங்கள்! உங்களுக்குத் தித்திக்க விருக்கும் அந்தக் காசை அதைக் கொடுத்தவன் எவ்வளவு கசந்துகொண்டு கொடுத்தான் தெரியுமா? மனமுவந்து மனமொப்பி அவன் கொடுத்ததாக நினைக்கிதீர்களா? நினைத்தீர்களானால் அது அறிவீனம். ஆத்திரக்காரன் அவன்! வழிமுறை யறியாதவன் அவன்! ஏதோ ஆத்திரத்தில் கொடுத்து விட்டான். வேறு வழியில்லை. என்ன செய்வான்! அவன் அடிமடியில் கைபோட்டுக் கசக்க வைத்த பணம் அது. அப்படிக் கை போடும்போது அவன் வயிற்றில் படு காயம் உண்டாக்கி விட்டீர்கள். அதன் பயனாக அவன் தீராத வேதனையை அநுபவித்துக் கொண்டிருக்கிறான். தனக்கு ஏற்பட்டிருந்த கடமையைச் செய்வதற்கே நிறுத்தப்பட்டிருக்கிறான் அவன் என்பதை உணர்ந்தோ உணராமலோ, ஆத்திர அவசரத்தில் ஒரு காரியம் செய்து, அவனையும் கெடுத்து, தன்னையும் வருத்திக் கொள்கிறான் பேதை!

போகட்டும்; மனிதனுக்கும், தெய்வத்திற்கும் இதனால் ஏற்படும் ஒரு உறவு முறைமையைச் சிறிது கவனிப்போம். "கடவுளே! என் கோரிக்கைகளை நிறைவேற்றி வையும், கை நிறையப் பொன்காசு போடுகிறேன்" என்று வேண்டிக் கொண்டான் ஒருவன். அது முற்றிலும் சரியானதுதான். சரியானது அன்று என்பவன் தெய்வ அபவாதத்திற்கு உள்ளாக வேண்டி யிருக்கும். இதை 'வேண்டுதல்' 'காணிக்கை' என்ற இரு தெய்வீக வார்த்தைகளால் சித்தரித்து விடுகிறோம்.

ஆனால் கவனிக்க வேண்டிய விஷயம் வேறு. வேண்டிக் கொண்டவன் எதற்காக வேண்டிக் கொண்டான்? கேவலம், தனது இச்சைகளைப் பூர்த்தி செய்து வைக்குமாறும், அதை நிறைவேற்றி வைக்கும் பக்ஷத்தில் பிரதியாகக் காணிக்கை செலுத்துவதாகவும் வேண்டிக்கொள்கிறான். அதன்றி, கடவுளுக்கு எப்படியாயினும் செய்ய வேண்டும் என்ற தூய்மை யுள்ளம் படைத்தவனாக இருப்பானானால், அவன் இதற்கு முன்னரே கடவுளுக்குச் செய்திருக்க மாட்டானா, இந்த நிபந்தனைகளுடன் தான் செய்வதாகச் சொல்வானா? வேண்டுதல் நிறைவேறினால் அவன் கடவுளுக்குச் செய்கிறானா என்பது வேறு விஷயம். எப்படிப்போயினும் கடவுளையும் மனிதனைப்போல் நினைத்துத்தானே ஒரு பேரம் பேசுகிறான் அவன்!

லஞ்சம் ஒரு தொத்து வியாதி. எச்சரிக்கை, முன்னறிக்கை யேதுமின்றிப் பிடித்துக் கொள்வது. இக் கணத்தில் சரியன்று என நினைக்கும் ஒருவன் மறு கணத்தில் அதன் வயப்பட்டு விடுகிறான். பின்னர் அந்த மாய்கையினின்று மீள வழி தெரியாது அதையே தனக்குச் சௌகர்யப்படுத்திக் கொள்கிறான். தேவ உலகத்திலிருந்து துரத்தப்பட்ட சயித்தான் நரகத்தைத் தனக்குச் சௌகர்யமாக அமைத்துக் கொண்டானல்லவா? அதேபோல் தான். ஒரு தேவிக்கு நாம் காணிக்கைச் செலுத்துவதற்குப் பதிலாக, ஒரு தேவி வலிய வந்து நமக்குக் கொண்டுவந்து கொடுத்தால், அதை மறுப்பதற்குத் திராணியற்றுப் போய்விடுகிறான் மனிதன்! அது தேவியின் சக்தி! அவள் மாய்கை!

தற்போதைய நிலைமையில் கைக்கூலி இன்றிக் காரியம் கைகூடுவதில்லையென்பது உலகறிந்த ரகசியம். கோர்ட்டுகள், ஸ்தல்ஸ்தாபனங்கள், பிரத்தியேக நிர்வாகத்திற் குட்பட்ட இதர ஸ்தாபனங்கள், எங்கு போயினும் வாசற்படியில் லஞ்சதேவியின் அக்காள் மாமூல் நாச்சியார் நின்று ஆரத்தியெடுத்து வரவேற்கிறாள். இது மட்டுமா? சீமைச் சட்ட சபையிலும் கூட 'லஞ்சம்' என்று புகார் கிளம்பியது சமீபத்தில். உண்மையோ பொய்யோ? தீயன்றிப் புகையெழும்பாது. இதைப் பற்றி மேன்மேலும் விவரித்துக் கொண்டிருப்பது பழங் குப்பையைக் கிளறுவது போல் தான்.

பணமே குறியென இருகை நீட்டி வாங்குபவனே! உன் மனச் சாக்ஷியை விற்று, நியாயம் உறைந்து கிடக்கும் இடத்தில் வயிறு எரியச்செய்து, அவர்களிடம் சாபத்தை யெல்லாம் வலியக் கொட்டிக் கொள்கிறாய் என்பதை ஞாபகத்தில் வை! கொடுப்பவனே! பணம் படைத்த செருக்கினாலும், அறியாமை, ஆத்திரம், அவசரங்களினாலும் நீ செய்து விடும் காரியம் ஏழைகள் பங்கில் கை வைத்து விடுகிறது. அவர்களுக்கு நியாயம் கிடைக்கிற தில்லை. அவர்கள் படும் இன்னல்களுக் கெல்லாம் ஆதிகாரணம் நீ தான். உன்னையும் வருத்திக் கொண்டு, கடமையைச் சரியாகச் செய்வதற்கு ஏற்பட்டிருப்பவன் ஒருவனுக்கு ஆசை மூட்டி, அவன் கெடுவதற்கு நீ ஒரு தூண்டுகோலாக இருக்கிறாய் என்பது ஞாபக மிருக்கட்டும்! உங்களிருவராலும் மனித சமூகத்தின்—அதன் மூலம் தேசத்தின்—முன்னேற்றமே தடை பட்டுப் போய்விடுகிறது என்பதைத் திரும்பத் திரும்ப மனதில் நினைவுறுத்திக் கொள்ளுங்கள்.



சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை

(ஈ. கிருஷ்ணய்யர் அட்வொகேட், எழுதியது)

ஸாதாரணமாய் ஸங்கீதத் தொழிலாளிகள் அவரவர் குருவினிடம் சிக்ஷை கற்றுக்கொள்வது ஒரு விதத்தில் பெரிய வக்கீல்களிடம் சட்டம் படித்தவர்கள் அப்ரண்டிஸ்களாகவும், 'ஜூனியர்' வக்கீல்களாயுமிருப்பதுபோலாகும். பெரிய வக்கீலிடமிருந்து சிறியவர் நேராக அதிக நன்மையடைவர் என்பதில்லை. பெயர்பெற்ற ஒருவருடைய ஆபீஸில் சேர்ந்திருந்தால் தமக்கும் சிறிது பெயர் கிட்டுமென்று நினைத்தும், அவ்வாபீஸுக்கு வரும் கக்ஷிக்காரர்கள் சிலரிடம் பழக்கம் பெறலாம் என்ற நம்பிக்கையுடனேயும் சிறியவர்கள் பெரியோரை அண்டியிருப்பார்கள். ஜூனியருக்கு ஸீனியர் தாமாகச் சிரத்தையுடன் அதிகம் கற்றுக்கொடுப்பார் என்று எதிர்பார்க்க முடியாது. அதுபோலவே பெரும்பாலும் பிரபல வித்வான்களிடம் சிஷ்யர்களாக அமரும் சிறிய பாடகர்களுடைய ஸ்திதியுமிருக்கும். ஆரம்ப சிக்ஷை ஒரு குருவினிடமிருக்கும்; வேறொரு பாடகருடைய ஸங்கீதத்தில் அதிக மோஹமிருக்கும். பல வித்வான்களிடம் சிறிது சிறிது காலம் இருந்து படிப்பாரும் உளர். பொதுவாக ஒரு பிரபல வித்வான்கூடவேயிருந்து கேட்டுக்கேட்டுப் பழகித் தானாகவே பயிற்சி செய்துதான் அநேகர் வெளி வருகின்றனர். சிரத்தையுடன் சிரமப்பட்டுச் சிஷ்யர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் பெரியோர் மிகச் சிலரே.

குருவும் சிஷ்யர்களும்

சிஷ்யர்களெல்லாம் குருவின் வழியையே பின்பற்றிப் பாடுகிறார்கள் என்பதுமில்லை. குருவினிடமிருந்து விஷயங்களறிந்தும், தனக்கு இயற்கையாய் அமைந்த சில குணங்களால் தனது பிரத்யேகமான கலையாக ஒருவருடைய ஸங்கீதம் விளங்கலாம். பலவகைப்பட்ட கேள்வியின் மூலம் ஒரே வழியில் ஸ்திரமில்லாமலுமிருக்கலாம். குருஸ்தானம் வஹிக்கும் சில வித்வான்களிடம் விஷயக்யானமும், சூக்ஷ்மங்களும் அதிகமிருந்தும் சிஷ்யன் பிடித்துக் கொள்ளும்படியான 'பாணீ' என்று ஸாதாரணமாய் வழங்கும் பிரத்யேக வழியொன்றும் இல்லாதிருக்கலாம். ஆனால் சில வித்வான்களுடைய ஸங்கீதம் அதைப் பற்றுடன் அடிக்கடி கேட்டாலும் அதில் பயிற்சி கொண்டாலும் மனதில் வேரூன்றி வேறு வழிகளை அணுக இடங்கொடாதபடி பிடித்துக் கொள்ளும் இயல்புடையதாயிருக்கிறது. அவ்வாறு தனக்கென்ற பிரத்யேக வழியும், தன் சிஷ்யர்களுக்கு ஆதரவுடன் கற்றுக்கொடுக்கும் ஸ்வபாவமும் கொண்ட பெரியார் காஞ்சிபுரம் ஸ்ரீ நாயனாப் பிள்ளை அவர்கள். அவருடைய அன்பும் ஆதரவும் பெற்று, அவரிடம் நன்கு பயின்று அவர் வழிப்படி பாடும் ஸங்கீத வித்வான்களில் ஒரு முக்யஸ்தர் ஸ்ரீ சித்தூர் சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள்.

அரையணா ஆசை

அவர் சித்தூர் ஜில்லாவில் கொல்லமாசனப்பட்டி என்ற கிராமத்திலுதித்தவர். அவர் தந்தையான பேரய்யா வாய்ப் பாட்டிலும் பிடிலிலும் தேர்ச்சியுள்ளவர். தாய்வழிப் பாட்டனார் வேங்கிடப்பா என்பவர் அக்காலத்தில் பஜனைகளில் சாஸ்திர ரீதியாய் நிருத்தியம் செய்வதில் திறம் பெற்றிருந்தார். இவ்வாறு ஸங்கீத வாஸனை நிரம்பியிருந்ததோர் குடும்பத்திலுதித்த நமது சுப்பிரமணிய பிள்ளையிடம் குழந்தைப் பருவ முதலே இயற்கையாக ஸங்கீத ஞானம் கண்டிருந்தது. 5 வயது முதலே பாட ஆரம்பித்தார். 7-வது வயதில் தன் தந்தையிடம் முறையே ஸங்கீதம் பயிலத் தொடங்கினார். அக்காலத்தில் ஸங்கீதத்தில் அவருக்கு அதிகப் பற்றுதல் ஏற்படுத்தும் பொருட்டு அவர் தகப்பன், அவர் நன்றாகப் பாடினால் அரை அணாக் கொடுப்பதாக ஆசை காட்டி மேன்மேலும் பாடச்செய்வது வழக்கம். இத்துடன் மதனப்பள்ளியில் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டு 5-வது வகுப்பு வரை கல்வி கற்றார்.

ஹரிகதா காலட்சேப அறிவு

அப்பால் அவர் குடும்பத்தினர் சித்தூருக்குக் குடிமாறினர். தன் தந்தையிடமே நன்கு ஸங்கீதம் கற்றுக்கொண்டு இளம்பிராயத்திலேயே சுமார் மூன்று வருஷம் ஆங்காங்கே ஹரிகதா காலக்ஷேபங்கள் செய்து வந்தார். அப்போது 15 வயது இருக்கும். பிறகு கச்சேரியும் செய்யத் தொடங்கினார்.

நாயனாப் பிள்ளையிடம்

தனது 20-வது வயதில் காஞ்சீபுரம் சென்று நாயனாப் பிள்ளையிடம் சீடராயமர்ந்தார். மூன்று வருஷகாலம் அவருடன் இடைவிடாது இருந்து அரிய பயிற்சியும் பெற்றார். பிற்பாடும் தனது 32 வயதுவரை அப்பெரியாரிடம் அடிக்கடி பழக்கமும் கொண்டிருந்தார்.

போதிய ஞானமும், 'வியவகாரங்கள்' உள்பட பல மர்மங்களின் அறிவும் பெற்றார். இவரைப்போல் நாயனாப் பிள்ளையிடம் சிஷ்யர்களா யிருந்தவர்கள் அநேகர். அவர்களாவன :—ஆதியில் அவருக்கு அதிக உதவியாயிருந்த கஞ்சிரா சிவக்யானம் பிள்ளை ; மாச்சேரி பிடில் சுந்தர சாஸ்திரியார் ; வாய்ப்பாட்டு நரஸிம்மாச்சாரியார் ; திருநெல்வேலி பிடில் சுந்தரேசபட்டர் ; மிருதங்கம் அகிலேச்வரய்யர்; பிடில் திருப்பாக்கடல் ஸ்ரீனிவாஸய்யங்கார் ; திருவீழிமிழலை நாதஸ்வர வித்வான்களின் மூன்றாவது ஸகோதரரான கல்யாணசுந்தரம் பிள்ளை. இவர்களில் நமது பிள்ளையவர்களே அதிகப் பிராபல்ய மடைந்திருக்கிறார் என்று சொல்லத் தேவையில்லை. தனது குருவினுடைய அன்பும் ஆதரவும் நல்ல சிக்ஷையும் இவைகளின் பயனும் நன்கு பெற்றவர்.

தோற்றமும் திறமையும்

வயது இப்போது 35. நடுத்தரமான தேகக்கட்டு. யௌவனமும் லக்ஷணமுமுள்ள தோற்றம். மொத்தத்தில் ஸரஸமான நடையுடைபாவனைகள். அநேகமாய் நன்கு வாரிமுடிந்த சிகையும் நெற்றியில் சாந்துப்பொட்டும் கொண்டு, ஷர்ட்டுக்கு மேலாகத் தோளிலிருந்து மார்பின் குறுக்காகப் பூணூல் மாதிரி அணிந்து கீழே முடிபோட்ட அங்கவஸ்திரத்துடனும் காணப்படுவார். பாடும்போது எப்போதும் சிரித்த முகத்துடனிருப்பார். பல் வரிசை நன்கு வெளித்தோன்றும் இடைவிடாத அப்புன்சிரிப்பு இயற்கையா யமைந்ததோ செயற்கையாகப் பழகியதோ என்று சிலர் சந்தேகப்படலாம். சிறிது கட்டையாயினும் கனமுள்ள சாரீரம். உதவு படிக்குக் குறைவில்லை. பிர்க்கா வகையைச் சேர்ந்ததுமில்லை. அதிக இனிமையும் நயமும் கொண்டதாகவில்லையாயினும் ஸாதகத்தினாலாய ஓர் வித விறுவிறுப்புக் காணலாம். பெரும்பாலும் தியாகராஜ கீர்த்தனைகளும், தமிழ்ப் பாடல்களான திருப்புகழ் முதலியவைகளுமே அவருக்குப் பாடம்.

உருப்படிகள் பாடுவதில்

இவரது குருவைப்போலவே இவருடைய உருப்படிகள் கச்சிதமாயும், சிட்டையாயும் ருசிகரமாயு மிருக்கும். ஒவ்வொரு கச்சேரியிலும் அவைகளை ஏராளமாய் வழங்கும் பாடகர்களில் இவரும் ஒருவர். ஒவ்வொரு கீர்த்தனைக்குப் பின்னும் ஸ்வரம் பாடாது இருப்பது அரிது. சில தடவை விஸ்தாரமாகக்கூட இருக்கும். அது இவர் பின்பற்றும் 'மத'த்துக்கான முக்யக் கொள்கைகளில் ஒன்று. ஸாஹித்தியத்தைத் தெளிவாகவும் அழுத்தமாகவும் உச்சரித்துப் பாடுகிறார். தனது சாரீரத்துக்கு ஏற்றவாறான உருப்படிகளைத் தெரிந்தெடுத்துப் பாடும், விதரணை யறிவும் கொண்டவர். மொத்தத்தில் ஸ்வரத்திலும் 'லய'த்திலும் அதிகப் பிடிப்புள்ள ஸங்கீதமாகவே தோன்றும். தன்னிச்சயம் கொண்டே பாடுகிறார். ஸ்வரப் பின்னல்களிலும் பல்லவி முதலிய விஷயங்களிலும், வித்தைகளும் வியவகாரங்களும் தன் குருவைப்போல் அவ்வளவு அபரிமித மில்லாவிடினும் அவ்வழியைச் சேர்ந்ததே என்று கேட்டவுடனே தெரியவரும். ராகங்கள் கையாளுவதும் குறைவில்லை. சில அபூர்வ ராகங்களும் இவரிடம் காணப்படுகின்றன. மனதைக்கவரும் இயற்கை அழகுள்ள ராகபாவமும், நல்ல மெருகும் நாஜூக்கும் கொண்ட குழைவுகளும் கமகங்களும் நிறைந்திருப்பதாலான விசேஷ சுகம் இவரிடம் அதிகம் எதிர்பார்க்க முடியாது. ஆனால் தாளக் கட்டுடன், கச்சிதமும் விறு விறுப்பும் கொண்டு இவைகளாலான ஒரு தனி ருசி காணப்படும். மொத்தத்தில் இவர் பின்பற்றும் வழியின் அம்சங்கள் யாவும் இவர் ஸங்கீதத்திலுண்டு. ஆனால் பிள்ளையவர்களின் யௌவன பருவத்தினாலும், வியவகார விஷயங்களில் மிதமிஞ்சி இன்னும் புகுந்து விடாதிருத்தலாலும், சாரீரம் கேட்டு அனுபவிக்கக் கூடியதாகையாலும், நடப்பில் ஸங்கீத உலகிலுள்ள அபிப்பிராயங்களையும் ருசிகளையும் கொஞ்சம் கவனித்து அவைகளுக்கு அதிகம் முரண்படாது நடக்கும் பருவமாதலாலும், அவ்வழிக் குண்டான தோஷங்கள் இவரிடம் அதிகம் காணப்படா. இவரது கச்சேரிகள் பெரும்பாலும் ரஞ்சகமுள்ளவைகளே. இவர் பற்றியிருக்கும் வழியின் நல்ல அம்சங்கள் இவரிடமே நன்கு தென்படுகின்றன எனலாம்.

முடிவுரை

ஊர் சித்தூராயினும், இப்போது சென்னையில் புரசைவாக்கத்திலேயே வசித்து வருகிறார். நடுத்தர வயதுக்குள், முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் வித்வான்களில் இவரும் ஒரு முக்கியமானவரே. ஸங்கீதத்தின் உயரிய நோக்கங்களையும், ருசிகளையும் நன்குணர்ந்து இன்னும் பலவகைப்பட்ட உருப்படிகளை மேன்மேலும் பாடம் செய்தும், அழகிய அம்சங்களை வளர்த்தும் உன்னத ஸ்திதிக்கு வரலாகும்.

A BOOK OF THE HOUR

"Personalities in Present day Music"

BY

E. KRISHNA IYER, Advocate.

The book includes 15 Portraits of Vidwans.

Price One Rupee Postage extra

Can be had of:

THE AUTHOR,
No. 3, Kondi Chetti Street,
G. T., Madras.

வியவசாயிகளின் கடன்

(ஜே. எஸ். பொன்னையா நாடார், எம்.ஏ. எழுதியது)

நமது தேச வியவசாயிகளின் புலங்களின் அளவு மிகக் குறைவானதென்றும், அவை துண்டு துணுக்குகளாகச் சிதறிக் கிடக்கின்றனவென்றும், அவர்களுடைய ஆடுமாடுகளின் சங்கியைதான் அதிகமே யொழிய அவை பயனற்றவையும் பலவீனமானவையு மென்றும், இக்காரணங்களினால் அவர்கள் குறைந்த வருவாயுள்ளவர்களா யிருப்பது மன்றி எவ்வித முன்னேற்றமு மடைய இயலாதவர்களாக இருக்கின்றன ரென்றும் விளக்கமுடியும். அந்தோ! இத்துணை இடர்ப்பாடுகள் போதாவா? குருவியின் தலையிற் பனங்காயை வைத்தாற் போல இவ்வேழைக் குடியானவர்களுக்குத் தாங்கக்கூடாத கடன் சுமையும் இருந்து வருகிறது. இந்நிலையில் தேசத்தின் வியவசாயம் எங்ஙனம் முன்னேற்ற மடையும்?

வீண் கடன்

நமது தேச வியவசாயிகளின் கடன், தகுதிக்கு மிஞ்சினதும் பயங்கரமுமானது. பஞ்சாப் மாகாணத்தின் நிலத் தீர்வையைக் காட்டிலும் எண்மடங்கு அதிகமாம் அக்குடிகளின் கடன். 1891-ம் வருஷத்தில் 'நிக்கல்சன்' ஐ.சி.எஸ். என்ற உத்தியோகஸ்தர் எடுத்த கணக்கின்படி சென்னை இராஜதானியில் விவசாயிகளின் கடன் ஆறு கோடி; சுமார் நாற்பது வருடங்களுக்குள் அத்தொகை மும்மடங்குக்கு மேலாகி இருக்கலாமென்று சென்னை பாங்கி விசாரணைக் கமிட்டியார் (Madras Provincial Banking Enquiry Committee) வெளியிட்டு இருக்கிறார்கள். இந்தியா முழுவதிலும், ஏதாவது ஒரு வருஷத்தில் சராசரி நூறு கோடி ரூபாய்க்குக் குறையாமல் வியவசாயிகளின் கடன்! இருக்கலாமென்பது அன்னவர் முடிவு.

சில அபிவிருத்தி, பொருளாதார முன்னேற்றம் முதலியவற்றிற்காக இக்கடன்கள் வாங்கப்பட்டிருப்பின் அவை முதலாகக் (Capital investment) கருதப்படும். ஆனால் நமது தேசக் கிராமவாசிகளின் கடன்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பாகம் வீண் கடனாக (Unproductive debt) அமைந்துள்ளது. இவ்வளவு ஏராளமான அளவில் வீண் கடனுக் குட்பட்டுழலும் குடிகளின் வாழ்க்கை என்னும்? இதற்குக் காரணந்தான் என்ன?

காரணங்கள்

வியவசாயிகளின் கடன் தொல்லைக்குப் பல காரணங்கள் உள்ளன; ஆயினும் அவை எல்லாவற்றிலும் முக்கியமானவை அவர்களின் மூடத்தனமும் அறிவீனமுமேயாம். அவர்கள் புலங்கள் சிறியன; மாடுகள் பலமற்றன; வருவாய் குறைந்தது; குடும்பமோ பெருத்தது. இவையனைத்தும் பொருளாதார நிலைமையிற் பின்னடைந்துள்ள எல்லாத் தேசங்களினதும் இயல்பே. இந்நிலையிலுள்ள குடியானவர்கள் கல்விப் பயிற்சி அற்றவர்களாகவும், முற்போக்கான நோக்கம் அற்றவர்களாகவும் இருந்து வருகின்றனர். இக்காரணங்கள் பற்றியே அன்னவர் மடமையும் அறிவின்மையும் எழுகின்றன. ஆகையினாற்றான் கடனுக் குள்ளாகின்றனர். இவ்வுண்மையை விளக்கச் சில உதாரணங்கள் தருவோம்.

எல்லாவற்றிற்கும் கடன்

வீட்டில் சாப்பாட்டுக்கு இல்லாவிட்டால் உடனே கடன் வாங்க ஓடுவார்கள்; மாடு இறந்துபட்டால் உடனே கடன்; விதைப்பதற்கும், களை பிடுங்குவதற்கும், உழுவதற்கும் கடன்; வீட்டில் இழவானாலும் கடன், சுபகருமமாயினுங் கடன். இவையெல்லாம் அவசியமான செலவுகளே; ஆயினும், இவையனைத்தும் சாதாரணமாக ஏற்படக்கூடியன; ஆகையால் முன்பே சேமித்து வைத்திருக்கும் பொருளிலிருந்து செலவிடப்பட வேண்டுமே யன்றிக் கடன்பட்டுச் செலவிடப்படத் தக்கன வல்ல. இச்சிறிய உண்மையை அறியாததனாலன்றோ இவ்வேழைக் குடிகள் இப்பெருந்துயருக்கு ஆளாகின்றனர்? கடனில்லாச் சோறு கால் வயிறு போதுமென்று இவர்கள் அறியும் நாள் எந்நாளோ! வயலில் இருக்கிற நெற் கதிரை நம்பிக் குதிரில் இருக்கும் நெல்லை விற்று டம்பமாகச் செலவு செய்துகொண்டலையும் நிர்விசாரிகள் தூர யோசனை செய்யும் நாளே நாட்டுக்கு நன்னாள்! கிராமக் கடைகளிற் சில்லறையாகவும் சிறிது சிறிதாகவும் அதிக விலை கொடுத்து மளிகைச் சாமான்களைக் கடனாக வாங்கிக்கொண்டு வரும் மடமைத்தனம் என்றுதான் ஒழியுமோ? அண்மையிலுள்ள பெருஞ் சந்தையில் அவைகளை மொத்தமாக மிகக் குறைந்த விலையில் வாங்கலாமென்றறிந்திருந்தும் அறிவிலிகளாகவே இருந்து பெரு நஷ்டமடைந்தால் நாம் என்ன செய்வது! இங்ஙனமாகப் பல முறைகளிலும் கடன்படும் கெட்ட வழக்கத்தை அடியோடறுத்து அவர்களின் மடமையை நீக்கினாலொழியக் கடன் நீங்காதென்பது திண்ணம்.

மண் ஆசை

இன்னும் ஓர் உதாரணம்: எல்லாத் தேசங்களிலும் கிராமவாசிகளுக்கு

மண்ணாசை மிகவும் அதிக மென்பர். நிலம் என்றால் உயிரையும் விட்டு விடுவர்; ஓரடி நிலத்திற்காக ஓராயிரம் ரூபாயானாலும் நியாயஸ்தலத்தில் (Court) செலவழிப்பர். நிலத்தைத் தவிர வேறு பொருள்களை அறியாதார் வேறெவ்வாறுதான் நடப்பர்? செழித்த வருடத்தில் சிறிது பொருள் வந்து கையிற் பணமாக மாறிவிட்டால் அதை உடனே நிலத்திற் போட்டுவிடுவர். இது பைத்திய மன்றோ? அத்துடன் பெரிய நிலச் சுவான் என்ற பெயரும், கீர்த்தியும் தமக்குக் கிடைத்து விடுகின்றன வென்று எண்ணுகின்றனர். கைம் முதல் காணவிட்டால் கடன்பட்டு நிலத்தை வாங்குகின்றனர். நிலம் அந்த வருடம் விளையாவிட்டால் 'அடுத்த வருடம் விளையும், அதற் கடுத்த வருடம், இன்னும் அதற்கடுத்த வருடம் விளையும்' என்று முடிவில் லாக் கணக்கிட்டு இலவுகாத்த கிளி போல என்றும் ஏமாந்திருக்கின்றனர். இதற்கிடையில் வட்டி வளர்ந்து கொண்டே போகிறது. கடைசியில் முதலுக்கும் மோசமாகும் வேளை வருகிறது. அப்பொழுதாயினும் 'சட்டி சுட்டது கையும் விட்டது' என்று போகாது, உடும்பு பிடித்தாற்போல நிலத்தைச் சதமெனப் பிடித்துக் கொண்டு, 'பெரியோர்கள் சம்பாத்தியம்' என்ற மனப் பேய் பிடித்து ஆகக் கடைசியில் எல்லாவற்றையும் இழந்து கெட்டுப் போகின்றனர். இக் கேடுகள் அனைத்திற்கும் காரணம் நிலப் பைத்தியம் அல்லவா? இம் மடமை ஒழியும் நாளே கடன் ஒழியும்.

வேறு களைகள்

நாம் மேற்காட்டிய இரண்டும் கிராம வாசிகளிற் பெரும்பாலாருடைய குறைகளாகும். ஆனால் வேறு ஒரு சிலருடைய குறையோ—அதுவும் மடமையால் எழுந்ததே—அவற்றினும் வருந்தத்தக்கது. வீண் டம்பங்களிலும், சிற்றின்பங்களிலும், நவீன நாகரிகப் பழக்கங்களிலும்—பொதுவாக நகரங்களை அண்மிய கிராமங்களில்—தங்கள் பொருளைப் பொருட்படுத்தாது விரயஞ் செய்து நாளைக் கழிக்கும் வாலிபர்கள் சிலர் உளர். சோம்பியிருப்பதையே விரதமாகக் கொண்டு, வீண் விளையாட்டுக்களில் உழல்வோர் ஒரு சிலர். ஊர் மடங்களே தம திருப்பிடமாக நினைத்துத் தூங்கித் தூங்கி எழும்பி நாளைக் கழிக்கும் நிர் விசாரிகளும் ஒரு சிலர். மேலும், கச்சேரிகளுக்குச் சென்று வீண் வம்புகளை இழுத்துவிட்டு, பெருமிதமான பொருளை அற்பக் காரியங்களுக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் வக்கீல்களுக்கும் வீணாகக் கொடுக்கச் செய்து கிராமக் குடிகளைக் கெடுக்கும் புல்லுருவிகள் போல்வாருமுளர் ஒரு சிலர். அந்தோ! நம் கிராம வாழ்க்கை கெட்டழியவும், வியவசாயம் க்ஷீணதசை யடையவும் காரணமாகவுள்ள இக்களைகளைக் களைந்தால் அல்லவோ நாடு நலம் பெறும்?

அநியாய வட்டி

இங்ஙனம் கூறுவதனால் எல்லா வியவசாயிகளின் கடன்களும் மடமையால் எழுந்தனவென்னும் ஒரே பிடிவாதக் கொள்கையையே யுடையோம் என்று எண்ணிவிட வேண்டாம். நாம் இங்கு இடித்துக் கூறியவை மூல காரணங்கள்; அவைகளைச் செவ்வனே ஆராய்தலே முதற் கடமையாகும். கிராம வாழ்க்கையிற் காணப்படும் மேற்காட்டிய மூல காரணமாகிய மடமை நிரம்பி யிருப்பதனாற்றான் பிற காரணங்களும் அதனைச் சார்ந்தெழுகின்றன. உதாரணமாக:—கிராமாந்தரங்களி லெல்லாம் அநியாய வட்டிக்குப் பணத்தைக் கொடுத்துப் பெரும்பொருள் ஈட்டிக் கொண்டு வரும் சாவகாரிகளும், செட்டிகளும், பிறரும் பலர் உளர். இன்னவர் தண்டும் கடுவட்டிக்குக் கணக்குக் கிடையாது. 'சந்தை வட்டி' என்று சந்தைக்குச் சாமான்கள் வாங்கப்போகும் ஜனங்களுக்கு ஒரு ரூபாயைக் கொடுத்து அதை மறுநாள் திரும்பப் பெறும்போது ஓரணா அல்லது இரண்டணா வட்டியாகப் பெறுவது திருநெல்வேலி, மதுரை ஜில்லாக்களில் சாதாரணம். நமது நாட்டில் ஒரு வருடத்திற்கு நூற்றுக்குப் பன்னிரண்டு ரூபாய் வசூலிப்பது தரும வட்டியாம்! இங்கிலாந்து முதலான தேசங்களில் நூற்றுக்கு வருடத்திற்கு ஒரு ரூபாய் மட்டுமே (one per cent) வட்டியாக வாங்குவதை நமது நாட்டினர் எப்படி வழங்குவரோ? 'அநியாய வட்டிச் சட்டம்', 'தக்ஷிண வியவசாயிகளின் கடன் நிவர்த்திச் சட்டம்' (The Deccan Agriculturists' Relief Act), 'பஞ்சாப்-நிலம் விற்பதைத் தடுக்கும் சட்டம்' (The Punjab Land Alienation Act), முதலான சட்டங்களும், இப்பொழுது சில மாகாணங்களிற் செய்யப்படும், 'சாவகாரிகள் சட்டம்' (Money Lenders' Act), முதலானவைகளும் மிகப் பயனளிக்குமென்று நாம் எண்ணவில்லை. வியவசாயிகளின் கடன்களையொழிக்க வியவசாயிகளைச் சீர்திருத்த வேண்டுமே யன்றிச் சாவகாரிகளை மட்டுந் தடுப்பதனாற் பெரும் பயன் விளையாது. மூட ஜனங்களை ஏமாற்றி அல்லது ஹிம்சித்துப் பிழைக்காவிட்டால் சாவகாரிகள் மனிதர்கள் அல்லரென்று ஒருவர் கூறுகிறார்.

நாம் மேற்கூறிய பல காரணங்களினாலும் விளையுங் கடன் தொல்லைக்கு நிவாரணம் என்ன? கூடிய வரையில் கடன் வழக்கத்தை நிறுத்தும் முறைகளையும், பொருளைச் சேமித்து வைக்கும் வழிகளையும் பரவச் செய்ய வேண்டும். சேமித்துக்கொண்டே கடனையுந் திருப்பிச் செலுத்தத் தக்கதான கூட்டுச் சீட்டுச் (Chit or chitty systems) சங்கங்களை ஸ்தாபிக்க வேண்டும். தற்காலத்திற்கேற்ற கல்வியறிவைப் பொதுஜனங்களுக்குப் போதிக்க வேண்டும். வீண் கடன் வாங்கும் வழக்கத்தை நிறுத்திய பின்புதான் குடிகளுக்கு க்ஷேமம் உண்டாகும்.

செய்ய வேண்டுவன

வியவசாயிகளின் பொருளாதார நிலைமையை மாற்றி அமைத்தாலன்றி எவ்வித முன்னேற்றமும் விரைவில் எய்த இயலாதென்பது எவரும் முதலில் அறியவேண்டிய உண்மை. துண்டு துணுக்குகளாகச் சிதறிக் கிடக்கும் புலங்களை ஒன்றுகூட்டல் வேண்டும்; ஆடுமாடுகளின் பெருக்கைக் குறைத்து, நல்ல பிதிர்களைப் பரவச் செய்து அவற்றின் பயனை மிகுதிப் படுத்தவேண்டும். சுகாதாரமும் வளர்ச்சியடைய வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாகக் கல்வியறிவும் பரவவேண்டும். கிராமச் சீரமைப்பு என்னும் இயக்கத்தைப் பெரிய அளவில் தேசமெங்கும் பரப்பி, குறைகளனைத்தையும் ஒருங்கே ஏக காலத்திற் களையும் முறைகளைக் கையாடினாற்றான் இப்பொழுதுள்ள கடன் தொல்லை நீங்கும்.

—கலைமகள்.

"சேர்ந்துழைப்போம்!"

என்ன தாராள நோக்கம்! கஷ்டப் பட்டவரின் கண்களைத் துடைப்பதில் எவ்வளவு ஆர்வம்! இவ்வளவு பரந்த மனமுடைய ஓர் ஆத்மாவை உலகம் இதுவரை கண்டதுண்டா? இப்போது மகாத்மாஜி பீகார் பூகம்ப நிவாரண வேலையில் இறங்கி யிருக்கின்றார். பாடலீ புரத்தில் நடந்த நிவாரணக் கமிட்டியின் முதல் கூட்டத்தில் அக்ராசனம் வகித்துப் பேசியபோது இவ்வளவு பரந்த மனமுடைய ஓர் மகானை உலகம் இதுவரை கண்டதில்லை என்றே அனைவரும் சொல்லும்படி யிருந்தது.

"பீகார் நிவாரண வேலை விஷயத்தில் மரியாதையான முறையில் சர்க்காருக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்" என்ற ஓர் தீர்மானத்தை காந்தியடிகளே பிரேரணை செய்து மிக உருக்கமான பிரசங்க மொன்று செய்தார். மாளவியாஜியும் மகாத்மாவை ஆதரித்துப் பேசினார். மகாத்மாவின் மணி வாக்குப் பின்வருமாறு:—

"நான் தீவிர ஒத்துழையாமைக்காரன். எனினும் இத்தீர்மானத்தை நான் முழு மனதுடன் ஆதரிக்கின்றேன். தெற்கே திருநெல்வேலியில் பேசியபோதும்கூட இந்நிலைமையில் காங்கிரஸ் வாதிகள் உள்பட ஜனங்கள் எல்லோரும் சர்க்காருடன் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டு மென்பதைப் பற்றி, வற்புறுத்தியதுண்டு. இவ்வேலையில் ஈடுபட்டுள்ள நாம் நம்மைக் காங்கிரஸ் வாதிகளாகவோ, அல்லது அல்லாதார்களாகவோ, இந்துக்களாகவோ, முஸ்லீம்களாகவோ அல்லது வேறெந்தக் கட்சியினராகவோ கருதுவதற்கில்லை. இந்த மகத்தான கஷ்ட நிவாரண கைங்கரியத்தில் அனைவரும் சேர்ந்து உழைத்துத்தான் ஆகவேண்டும். சர்க்காரின் ஒத்துழைப்பு கிடைத்தால்தான் மிக்க பிரயோசனத்தோடு வேலை செய்ய முடியும். ஜனங்களின் உதவி இருந்தால் தான் சர்க்காரின் பிரயாசைக்கும் வெற்றியுண்டு. ஆகவே முதன் முதலில் இங்குள்ளவர்கள் தாங்கள் 'காங்கிரஸ் வாதி', 'ஒத்துழையாதார்' என்ற எண்ணங்களை மறந்துவிட வேண்டும். சர்க்காருடன் ஒத்துழைப்பது என்றால், சர்க்கார்களின் குற்றங் குறைகளையும் எடுத்துக் கூற உரிமை உண்டு. நாம்

பாடுபடுவதே பொதுவான லட்சியம். அதற்குப் பூரண ஒத்துழைப்புத் தருவது நமது கடமை!" என்பது மகாத்மாவின் மனமுவந்த வாக்கு

அரசியல் விஷயத்தில் மகாத்மாவுக்கும் சர்க்காருக்குமுள்ள அபிப்பிராய பேதங்கள் சொல்லிமுடியாது. ஹரிஜன இயக்க விஷயத்திலும் மகாத்மாஜி விரும்பிய அளவுக்குச் சர்க்கார் ஒத்துழைத்திருக்கிறார்களென்று சொல்ல முடியாது. ஆனால் இந்தப் பூகம்ப நிவாரண வேலையில் சர்க்காரும் காங்கிரஸாரும் பூரணமாகச் சேர்ந்துழைக்க வேண்டுமென்று மகாத்மா சொல்கிறார். அவரது தூய உள்ளம் இதனின்று பன்மடங்கு அதிகப் பிரகாசமாகத் தெரிகிற தல்லவா?

ஊடுருவி மகாத்மாவின் சரிதத்தைப் பார்ப்போமானால், அவர் ஒற்றுமைக்காக உயிரையும் அளிக்கத் தயாராயிருக்கும் உண்மைத் தியாகி என்பது தெரியவரும். தென்னாப்பிரிக்காவிலும் மகாயுத்த காலத்திலும் வரிகொடா இயக்கம் நடந்ததற்குப் பின் 'கேதா' பிராந்தியத்திலும், ரவுலட் கிளர்ச்சிக்குப் பின்னர் தேசத்தில் அமைதி நாட்டுவதிலும், இரண்டாவது வட்டமேஜை நடந்த காலத்திலும், இன்னும் எத்தனையோ சமயங்களில் சர்க்காரோடு மகாத்மா ஒத்துழைத்திருக்கிறார். அநீதமான கொள்கையை மட்டும் அவர் எதிர்ப்பவரே யன்றி, சேவை செய்வதில் யாரோடும் கலந்து வேலை செய்பவர் மகாத்மா. இப்போதாவது மகாத்மாவின் உயரிய வாழ்க்கைத் தத்துவங்கள் சர்க்கார் மூளைக்கு எட்டி யிருக்குமா வென்று பார்ப்போம்.

கதரை அணியுங்கள்

பீஹார் வேலை

(மகாத்மா காந்தி)

ஹரிஜன இயக்கச் சுற்றுப் பிரயாணத்தை நிறுத்துவது எனக்கு வருத்தமாய்த்தா னிருக்கிறது. அதை நிறுத்துவது அவசியமாகிவிட்டது. ஏனென்றால், ஸ்ரீயுத ராஜேந்திரப் பிரசாதின் அழைப்புக்கு இணங்க வேண்டியது என் கடமையாகும். அவரும் என்னை அழைப்பதை எவ்வளவு ஒத்திப் போடமுடியுமோ அவ்வளவும் தள்ளித் தான் போட்டார். பீகார்ப் பூகம்பம் கடுமையான கஷ்டந்தான். என்றாலும் அந்தப் பூகம்பக் கஷ்ட நிவாரணத்தை விட, தீண்டாமை விலக்கு வேலை அதிக முக்கியமானதே யாகும். நேரே யிருந்து கவனமாய்ப் பணிவிடை செய்து சொஸ்தம் செய்ய வேண்டிய நீண்ட, நாள்பட்ட கொடிய நோய்களைப் போன்றது தீண்டாமை. அந்த நோயைப் பரிகரிக்கும் வைத்திய வேலையில் ஈடுபட்டிருந்த நான், ராஜேந்திர பாபுவின் அழைப்புக்கு இணங்குவதா, இணங்குவதே யில்லையா என்பதை முடிவு செய்யவேண்டியவனானேன். அழைப்பு வந்ததும் சுற்றுப் பிரயாணத்தை நிறுத்தி வைத்து விட்டேன். ஆனால், நான் சுற்றுப் பிரயாணம் செய்யாது பாக்கியிருக்கும் மாகாண ஹரிஜன ஊழியருக்கு ஒரு உறுதிகூற விரும்புகிறேன். எவ்வளவு சீக்கிரத்தில் நிலைமைகள் இடங் கொடுக்குமோ அவ்வளவு சீக்கிரத்தில் சுற்றுப் பிரயாணத்தை மறுபடியும் ஆரம்பித்துவிடப்போகிறேன். தீண்டாமை விஷயத்தில், என்னைப்போலவே ராஜேந்திர பாபுவுக்கும் கூர்ந்த சிரத்தை உண்டு. எவ்வளவு சீக்கிரத்தில் இயலுமோ அவ்வளவு சீக்கிரத்தில் இவ் வேலையினின்றும் அவர் என்னை விடுதலை செய்து விடுவார். முதலில் உத்கல், அஸ்ஸாம் இவ்விரு இடங்களுக்கும் பிரயாணம் செய்யலாமென்று எண்ணி யிருக்கிறேன். அவற்றிலும் எதன் சீதோஷ்ண நிலைமை சௌகரியமா யிருக்குமோ அதைப் பார்த்தே முடிவு செய்யப்படும். ஹரிஜன ஊழியர் எச்சரிக்கையா யிருப்பார்களாக.

—ஹரிஜன்.

மகாத்மா காந்தி எழுதிய
ஆரோக்கிய வழி
விலை அணா 4

கஷ்ட நிவாரணி எது ?

சேத் ஜமுனாலால் பஜாஜ் அடியிற் கண்ட விண்ணப்பத்தைத் தேச மக்களுக்குச் சமர்ப்பித்திருக்கிறார் :—

"நான் பீஹார் மாகாணத்தைச் சுற்றி வந்தபோது ஏழைகள் ஜல்லி வாரிக் கொட்டிக்கொண்டும், ரோடு போட்டுக் கொண்டும் கூலிவேலை செய்வதைக் கண்டேன். நகரங்களில் ஒவ்வொரு கூலிக்கும் பிரதிதினமும் இரண்டணாக் கிடைக்கிறது. சம்பரானிலுள்ள கிராமங்களில் தினமொன்றுக்குக் கூலி அரையணாத்தான் கிடைக்கிறது. இந்தப் பூகம்பத்தினால் கஷ்டப்படும் பரம ஏழைகளுக்கு உபகாரம் செய்யக் கூடியது சர்க்காவே என்று எனக்குத் தோன்றுகிறது.



சேத் ஜமுனாலால் பஜாஜ்

"பீகாரில் ஏழைகளால் தயாரிக்கப்படும் கதரை வாங்குவதற்குத் தேச மக்கள் தயாரா யிருக்கவேண்டும். இப்போது பீகாரில் இரண்டேகால் லட்ச ரூபாய் பொறுமான கதர்தான் வருடா வருடம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இப்போது பூகம்பக் க்ஷ்ட நிவாரணத்துக்குக் கதரையும் கருவியாக உபயோகிப்போமானால் ஒரு மாதத்திற்கு ஒரு லட்ச ரூபாய் பொறுமானமுள்ள கதரை உற்பத்தி செய்ய முடியும். கடுமையான வேலைகளுக்குத் தேக வலிமை யில்லாத ஏழைகளுக்குக் கதர் கஞ்சி வார்க்கும் என்பதில் ஐயமில்லை. பீகார்க் கஷ்ட நிவாரணத்துக்காக அகில இந்தியாவிலும் பீகார்க் கதர் ஏராளமாக விற்பனையாக வேண்டும்.

"பீகாருடைய உதவிக்காகத் தேசம் இதுவரை செய்துவரும் உதவிக்கு நன்றி கூறுகிறேன். இனி பீகார்க் கதரை விற்பதற்கும் வாங்குவதற்கும் தேசமெங்கும் சிரத்தை ஏற்படவேண்டும். பீகார்க் கதர் வாரங்கள், பீகார்க் கதர்க் காட்சிகள் முதலியன நடத்தி, மிக்க கஷ்டத்திலாழ்ந்திருக்கும் இங்குள்ள மக்களின் கண்ணீரைத் துடைக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

சட்ட மியற்றுதல்

தீண்டாமையை விலக்குவதற்குச் சட்டம் எவ்வாறு உதவுமென்பதைப் பற்றி ஒரு பம்பாய் சட்டநிபுணர் ஒரு யாதாஸ்து எழுதினார். அது இன்றைய ஹரிஜன் பத்திரிகையில் வெளியாகி யிருக்கிறது. அதைப்பற்றி மகாத்மாஜி ஹரிஜன் பத்திரிகையில் எழுதியுள்ள குறிப்பின் சாராம்சம் பின்வருமாறு :-

"தார்மீக வழியில் நுழையக்கூடாதென்றும், தனி மனிதனின் மனோபாவங்களைத் தாக்கக்கூடாதென்றும் சனாதன சகோதரர்கள் கட்சியாடுகின்றனா. ஆனால் அதே காரணங்களினாலேயே தீண்டாமையைத் தடுக்கவும சட்டத்தின் உதவி தேவையாயிருக்கிறது. சட்ட சம்பந்தமான விஷயங்களைப்பற்றி முதன் முதலில் நியாயவாதிகள்தான் முடிவு செய்யவேண்டும். பிறகுதான் சாஸதிரிகளும், ஹரிஜன சேவா சங்கங்களும, இதரர்களும் தலையிடலாம்.

ஆனால் பொதுஜனங்கள் ஆதரிக்காத ஓர் சட்டத்தைப் பலவநதமாக நுழைப்பதற்கு நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். காரணங் காட்டி நடத்தப்படும் வாதங்களும், அபிப்பிராயச் சேர்க்கைகளும்தான் பொதுஜன எண்ணத்தைத் திருத்த இயலும். பிரசாரம் நடந்த பின்பு ஹிந்து ஜாதியிலுள்ள அறிஞர்கள் இந்தச் சட்ட முறையை ஆதரிக்கவில்லை யென்று தோன்றினால் கேவலம் மெஜாரிட்டி வோட்டினாலாவது சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்துவிடலா மென நான் அபிப்பிராயப்பட மாட்டேன். எங்கெந்த இடங்களில் ஹரிஜனங்களுக்குக் கோயில் பிரவேசம் கட்டாயம் அவசியமெனப் பெரும்பாலான ஹிந்துக்கள் எண்ணுகின்றார்களோ அவ்வாறு முடிவு செய்ய அவர்களுக்கு உரிமை இருக்கவேண்டும். இப்போது அந்த உரிமைக்கு இடைஞ்சலாகச் 'சட்டம்' இருப்பதாக லாயர்கள் சொல்கின்றனர். அதை மற்றொரு சட்டத்தினால்தானே நிவர்த்திக்க முடியும்.

கதரையே

அணியுங்கள்

மகாத்மாவின் பதில்

ஹப்ளியி லிருந்து ஒரு நண்பர் விடுத்த கேள்விக்கு மகாத்மாஜி இன்றைய ஹரிஜன் பத்திரிகையில் பதில் எழுதி யிருக்கின்றார்.

"தீண்டாமை என்பது செயற்கையின்பலனே யன்றி இயற்கை யன்று என்பது எனதபிப்பிராயம். மனிதனுடைய குணங்கள், அறிவுத்திறமை, முதலியவைகளுக்கும் தீண்டாமைக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. ஹிநது சமூகத்தில் தீண்டாதார் என்று ஒதுக்கி வைக்கப்பட்டவர்களில் பலர் தங்கள் குணாதிசயங்களிலும் அறிவிலும் மேல் ஜாதியாருக்குச் சமானராகவே இருக்கின்றனர். ஆயினும் அவர்கள் 'தீண்டாதார்' எனவே இதரரால் கருதப்படுகின்றனர். ஹிந்து சமூகத்தில தீண்டாமை யில்லாது போகுமாயின் 'சமூகத்தில் நான் உயர்ந்தவன் நீ தாழ்ந்தவன்' என்ற பேச்சுக்கே இடமிருக்காது. அனாவசியமான போட்டா போட்டியும் சண்டைகளும் இருக்க மாட்டா."

உலகத்தின் கண்களில்

பெரிய நிகழ்ச்சிகள் நடக்கும்போது, அந்த இடத்திலும், சமயத்திலும் இருப்பவர்களின் எண்ணங்கள் பல காரணங்களால் பாதிக்கப்பட்டிருக்கும். ஆகையால் அவற்றைப்பற்றித் தூரத்திலுள்ளவர்களுடைய அபிப்பிராயத்தையும் அறிவது அவசியமாகும். மகாத்மா காந்தியின் ஹரிஜன இயக்கத்தைப் பற்றியும் இந்த மாதிரியே அந்நியர் என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளுவது நலமல்லவா? கீழே அத்தகைய இரண்டு முக்கிய அபிப்பிராயங்களைப் பார்ப்போம்.

லண்டனில், கட்சிப் பிரதி கட்சிகளுடன் சம்பந்தமில்லாமல் உயர்ந்த முறையில் நடக்கும் ஒரு அரிய பத்திரிகை 'டைம் அண்ட் டைட்' என்பது. இந்தப் பத்திரிகையில் ஒரு மாஜி ஐ. ஸி. எஸ்.காரரான ஜே. டி. குவின் என்பவர் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். சமீபத்தில் மகாத்மாஜி தென்னாட்டுக்கு விஜயம் செய்ததன் பலாபலன்களை அவர் ஆராய்ந்திருக்கிறார். அவர் சொல்லுவதாவது :—

“பத்து வருஷங்களுக்கு முன்னே தீண்டாதோர் விஷயத்தில் எவ்வித மாறுதலும் கூடாதென்று வைதீகர் மூர்த்தன்யமாயிருந்தார்கள். ஏது, அவர்களை மாற்றவே முடியாதென்றுதான் தோன்றிற்று; அவ்வளவு பலமாக எதிர்த்தார்கள். இன்று அவர்கள் தளர்ந்துவிட்டார்கள்; ராஜிக்கு வரத் தயாராயிருக்கிறார்கள். காரணம் என்ன? காந்தி ஒரு தேசிய வீரத் தலைவன். அதோடு மகா புனிதவான்; தெய்வங்களைக் கூடப் பணியவைத்துவிடக்கூடிய பரிசுத்தம் வாய்ந்தவன்.

“தருக்க சாஸ்திரம் வேண்டுமானால் வைதீகர் பங்கிலிருக்கலாம். ஆனால், மனித சமூகத்தின் அனுதாபமும், உலக அபிப்பிராய ஆதரவும் காந்தியின் பக்கந்தானிருக்கின்றன. தீண்டாதோரும் வரவரத் தைரியமடைந்து வருகிறார்கள். ராஜீய காரணங்கள் வேறே இருக்கின்றன. ஆகையால், ஹிந்து சமூகத்தில் பெரும்பாலோர் காந்தியையே ஆதரிக்கப் போகிறார்கள்.

“பத்து வருஷத்துக்கு முன்னே சிலர் ஒரு சோதிடம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அடுத்த நூற்றாண்டிலும் இந்தத் தீண்டாமை என்ற அவமானம் இருந்துகொண்டேயிருக்கப் போகிறது என்று அவர்கள் சொன்னார்கள். இப்பொழுதோ என்ன தோன்றுகிறது, தெரியுமா? 1950-ம் வருஷத்தில், தீண்டாமையின் அடையாளங்கூட இராது என்றுதான் தோன்றுகிறது.”

இது ஒரு அபிப்பிராயம். இன்னொருவர் சொல்லுவதையும் பார்க்கலாம். கனம் எல்பர்ட் டி. தாமஸ் என்பவர் ஒரு அமெரிக்கர். பிரசித்தி பெற்ற சரித்திர ஆசிரியர்; சரித்திர ஆராய்ச்சிக்காரருங்கூட. இவர் “சரித்திரத்தில் காணும் உலக சமாதானம்” என்று ஓர் வியாசம் எழுதியிருக்கிறார். இந்த வியாசம் “சர்வ தேச சமரசம்” (இன்டர் நேஷனல் கான்ஸிலியேஷன்) என்ற பத்திரிகையின் ஒரு சஞ்சிகை ரூபத்தில் வெளி வந்திருக்கிறது.

இந்தப் பத்திரிகையைக் குறித்தும் இங்கே இரண்டொரு வார்த்தைகள் சொல்லுவது அவசியமாகும். கார்னீஜீ என்ற கோடீசுவரரைப் பற்றிக் கேள்விப் படாதவர் ஏது? அந்தப் பிரபு, பல தர்மங்களைச் செய்திருக்கிறார். உலக சமாதானத்தில் பெரிதும் பற்றுடையவர். பிரசித்தமான ஹேக் சமாதான மாளிகையின் முழுக் கட்டிடச் செலவையும் ஏற்றுக் கொண்டவர். இவருடைய நன்கொடையைக் கொண்டு நடப்பது “சர்வதேச சமரசம்” என்ற பத்திரிகை. உலகப் பிரச்சினைகளில் ஒவ்வொரு விஷயத்தையும் பற்றி, அததில் உலகப் பிரசித்தமான ஒவ்வொருவரைக் கொண்டு வியாசங்கள் எழுதச் சொல்லி, வெளியிடும் பத்திரிகை இது. பாரபட்சமற்ற சரித்திராசிரியரான தாமஸ் இதில் எழுதியிருப்பதைக் கவனியுங்கள் :—

‘‘லெனின், சன், காந்தி இந்த மூவருடைய மகா இயக்கங்களும் பாரமார்த்திகமானவை. வழிகளில் வித்யாசமுண்டு. ‘பலாத்காரம் செய்யாதே’ என்பது காந்தியின் கட்டளை. ‘மண்டைகளை உடைத்துக் கொல்லு’ என்றார் லெனின். ‘உன்னுடைய சொத்தை நீ கைப்பற்றி, அந்நியனை விரட்டி ஓட்டு’ என்பது சீனத்தலைவனான ஸன் அவர்களின் வாக்கு. மூன்று இயக்கங்களும் வெள்ளைக்காரரின் பொருளாதார, ராஜீய ஏற்பாடுகளால் விளைந்த விளைவுகள். நாம் 18-வது நூற்றாண்டையும் 19-வது நூற்றாண்டையும் எண்ணிக் கணக்கண்டு கொண்டிருக்கக் கூடாது.

“காந்தி இப்பொழுது தீண்டாதோரை உயர்த்த வேண்டுமென்கிறார். இந்த இயக்கம் அவரது ராஜீய இயக்கத்தைவிட அதிகப் பாரமார்த்திகம் வாய்ந்தது. உண்மையில் மனிதன் பெருமை வாய்ந்தவனா அல்லவா என்பதைச் சோதித்தறியப்போகிறது இந்த இயக்கம்.”

Chats Behind Bars

BY

C. RAJAGOPALACHARI

Price As. 6 *Postage extra.*

Sangu Book Depot

Triplicane, Madras.

“ ஜகன்மோகினி ”

பதினேன்றாவது ஆண்டு பிறந்து விட்டது.

இதில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதும் தியாகக்கோடி* என்னும் அதியாச்சரியமானதும், உண்மைத் தியாகத்தின் உயரிய தத்வத்தை விளக்கிக் காட்டுவதுமான துப்பறியும் நாவல் வெளிவருகின்றது.

வருஷ சந்தா ரூ. 1—8—0. தனிப்பிரதி அணா 2.

ஏஜண்டுகள் தேவை

“ ஜகன்மோகினி ” ஆபீஸ்,

26, தேரடித் தேரு, திருவல்லிக்கேணி சென்னை.

* அல்லது சமநிலைத் தோண்டு.

குறிப்புகள்

மீன் கூடை சிரிக்குது !

மீன் கூடைக்காரர்கள் அர்த்தமில்லாததற்கெல்லாம் சண்டை போடுவார்களென்பர். ஆனால் மெத்தப் படித்த சீமான்களின் சபைகளில் ஏற்படும் வாக்குவாதங்களைப் பார்த்தால் மீன் கூடைகூடச் சிரிக்குமென்று தோன்றுகிறது. பஞ்சாப் சர்வ கலா சாலை ஸெனேட் சபையில் மெத்தப் படித்த பெரியார்களிருப்பதாகக் கேள்வி. ஒரு கோட்டை புத்தகத்தைப் படித்துத் தொலைத்தும் அங்கிருப்பவர்களுக்கு இன்னும் மூளை திறம்படவில்லை. ஹிந்து-முஸ்லீம் சண்டையை ஒருவர் கிளப்புகிறார். சபையில் பாதிப் பேர் முஸ்லீமாயிருக்கவேண்டுமென்று ஒருவர் கத்துகிறார். இன்னொருவர் சபையில் மூன்றிலொருபங்கு சீக்கியரே இருக்கவேண்டுமெனக் கதறுகிறார். சபை குழப்பத்தோடு நடக்கிறது. ஜாதிப்பித்தம் தலைக்கேறுகிறது. கடைசியில் ஒரு பெரியார் தம் அடியார்கள் பின்தொடரச் சபையைவிட்டு வெளியே போய்விட்டாராம். இதெல்லாம் என்ன வெட்கக்கேடு! இந்த மாதிரி ஜாதிப்பித்தம் பிடித்தவர்களின் ஆட்சியில் காலேஜுகளும் பள்ளிக்கூடங்களும் இருந்தால் பையன்கள் உருப்படுவார்களா ?

நண்பர் கிருஷ்ணய்யருக்கு

'சங்கி'ல் நமது சங்கீத வித்வான்களைப்பற்றி விமரிசனங்கள் எழுதி வரும் நண்பர் ஈ. கிருஷ்ணய்யருக்கு ஐரோப்பிய மேதாவியான ரோமேன் ரோலண்ட் அவர்களிடமிருந்து ஒரு பாராட்டுக் கடிதம் வந்திருப்பது பற்றிச் சந்தோஷப்படுகின்றோம். ஐரோப்பிய சங்கீத உலகில் ரோமேன் ரோலண்ட் ஒரு பெரிய விமர்சகர். ஏழெட்டு விமர்சன நூல் எழுதியவர். நோபல் பரிசும் பெற்ற பேரறிஞர். கிருஷ்ணையரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட தென்னிந்திய சங்கீத நூலை அந்த மேனாட்டு அறிஞர் பாராட்டுவது நமது கவனத்திற்கு உரியதுதானல்லவா ?

ஸ்டேஷன் மாஸ்டரே, உஷார்!

ஆக்ரா அஸிஸ்டெண்ட் ஸ்டேஷன் மாஸ்டருக்கு, செலவு தொகையோடு 50 ரூபா அபராதமும் தரவேண்டுமெனத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு இந்தியக் கனவான் ஜி.ஐ.பி. ரெயில்வேயில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவர் ஆக்ரா ஸ்டேஷனில் இறங்கிப் புஸ்தகங்கள் வாங்கப் போயிருந்தாராம். அப்போது அந்த ஸ்டேஷன் மாஸ்டர் அந்த இந்திய கனவானின் மூட்டை முடிச்சுகளையெல்லாம் வாரி வெளியே போடச் சொல்லிவிட்டு யாரோ இரண்டு வெள்ளைக்காரர்களுக்கு இடங்கள் தரப்பட்டுவிட்டனவென்று சொன்னாராம். இது தான் நடந்த விஷயம். வேறு வண்டியில் அந்த இந்திய கனவானுக்குத் தான் இடம் தந்ததாக ஸ்டேஷன் மாஸ்டர் கோர்ட்டில் வாதித்துப் பார்த்தார். வாதம் பலிக்கவில்லை. கடைசியில் அபராதம் விதிக்கப்பட்டு விட்டது. ரயில்வே ஸ்டேஷனில் உத்யோகம் பார்ப்பவர்கள் வெள்ளைக்காரரென்றும் கறுப்பு மனிதரென்றும் வித்தியாசம் காட்டுவானேன்? இந்தியர் கொடுக்கும் காசுகள் தேசல் காசுகளா ?

விலை அணா இரண்டே ! முந்துங்கள்!!

ஸ்ரீமான் S. G. கிட்டப்பாவின்

சரித்திரம்

காலஞ்சென்ற சங்கீத வித்வான் ஸ்ரீமான் கிட்டப்பாவின் சரித்திரம் வெளி வந்துவிட்டது. 53 பக்கங்களும் 5 அழகிய படங்களையும் உடையது. ஸ்ரீ கிட்டப்பாவினிடம் நெருங்கிப் பழகிய தேசபக்தர் ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியரால் எழுதப் பெற்றது.

சங்கு ஏஜண்டுகளுக்கு வியாபாரத்திற்காக ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும். மாதிரிக் காப்பிக்கு 3 அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

விலாசம்:—

ஆக்கூர், அனந்தாச்சாரி,

ஆரிமுத்து ஆசாரி மேஸ்திரி தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

செய்தித் திரட்டு

வல்லபாய் யோகியாகிறார்

சிறையிலுள்ள ஸர்தார் வல்லபாய் படேல் யோகசாதனம் செய்து வருகின்றாராம். அவரது தேக சவுக்கியமும் வர வர நன்றாகி வருகிறதாக ஓர் செய்தி கிடைத்திருக்கிறது.

* * *

வித்வான் செம்பை வைத்தினாத பாகவதர்—பிடில் சௌடய்யா, மிருதங்கம் மணி, கஞ்சீரா தட்சிணாமூர்த்தி பிள்ளை சகிதம்—பீஹார் நிவாரண நிதிக்காகப் பெங்களூரில் ஒரு கச்சேரி செய்தார். 1,000 ரூபாய்க்குமேல் வசூலாயிற்றாம்.

* * *

குழந்தைகளுக்குக் கல்வி போதிப்பதில் அநேகம் புதிய முறைகளைக் கண்டு பிடித்து உலகத்துக்கு உதவிய மாண்டிஸோரி என்ற மாதரசி மகாத்மா காந்தியிடம் அத்தியந்தப் பக்தியுடையவள். அவள் இந்தியாவுக்கு வரப்போவதாகக் கேள்விப்பட்டுச் சந்தோஷப் படுகிறோம்.

* * *

இதுவரை மகாத்மா காந்திஜி சேர்த்துவரும் ஹரிஜன நிதிக்கு 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் சேர்ந்திருக்கிறது.

* * *

சென்ற திங்களன்று பம்பாயில் 'வேலையில்லாது திண்டாடுவோர்' கூட்டமொன்று கிளம்பிக் கார்ப்பொரேஷன் கட்டிடத்துக்குள் புகுந்து, "எங்களுக்குச் சோறு வேண்டும்" என்று கூச்சலிட்டது. ஹாலில் இருந்த ஆஸனங்களில் அனைவரும் உட்கார்ந்து கொண்டனர். என்ன சொல்லியும் வெளியே போகாததால் போலீஸ்காரர் வந்து அத்தனை பேரையும் வெளியே தள்ளவேண்டியதாயிற்று. கார்ப்பொரேஷன் இப்போது போலீஸ் பாராவில் இருந்துவருகிறது.

* * *

மூல்தான் சிறையிலிருந்து விடுதலையடைந்த தேசத் தலைவர் கிச்லு அவர்களை ஒரு நிருபர் பேட்டி கண்டபோது, "காங்கிரஸ் இயக்கத்தைக் கொன்று விட்டதாக அரசாங்கம் நினைத்துக்கொண்டிருக்குமானால் அது சுத்தத் தவறான எண்ணம்" என்று சொன்னார்.

சத்திய சோதனை

முதல் பாகம் ரூ. 1-8.
இரண்டாம் பாகம் ரூ. 2.

மகாத்மா காந்தி

தம் சுயசரிதத்தை இதில் சொல்லியிருக்கிருர்.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-c, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription :

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.
Advertisement rates per Page	Rs. 40 0 0
" Half Page	Rs. 20 0 0
" Quarter Page	Rs. 10 0 0
" per column inch	Rs. 1 8 0

One page is divided into 3 columns of $2\frac{1}{4}'' \times 9''$

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.
4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office : 8-c, Pycrofts Road,
TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணு 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு	ரூ. 40 0 0
அரைப் பக்கத்திற்கு " "	ரூ. 20 0 0
கால் பக்கத்திற்கு " "	ரூ. 10 0 0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு " "	ரூ. 1 8 0

ஒரு பக்கம் $2\frac{1}{4}'' \times 9''$ அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.
4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"சுதந்திரச் சங்கு",
8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu Press"

Invites enquiries of all classes of
General & Commercial Printing.

Printers of

"Harijan"

Conducted by Mahatma Gandhi

and

Published under the auspices of
The Servants of Untouchables' Society

Subscription for "Harijan"

Inland Rs. 4 Foreign Rs. 5-8.

8-c, PYCROFTS ROAD, TRIPLICANE, MADRAS.

Edited, Printed and Published by S. Subramanian at the Swathanthara Sangu Press, Triplicane, Madras.